பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 31 செவ்வாய்க்கிழமை (14-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:170

# பாடசாலைகளிலிருந்து படையினர் விலகுவது உடனடியாக நடக்காது!

## நடைமுறைச் சிக்கல்கள் குறித்து இராணுவத் தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம்,மே14

குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகளிலிருந்து அவர்களை விலக்கிக்கொள்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் -

படையினர் தங்கியுள்ள 32 பாடசாலைகளில் இருந்து அவர்களை உடனடியாக விலக்குவது சாத்தியமான விடயம் அல்ல எனவும் - படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

படை உயர் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் கலந்துகொண்ட மாநாடு நேற்றுக்காலை யாழ். சுபாஸ் விடுதியில் இயங்கும் 51ஆவது படையணியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

பாடசாலைகளில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றி அந்த மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிகளின் கீழ் பாடசாலைகளில் இருந்து படைகள் விலக்கிக்கொள்ளப்படாதது குறித்து குற்றச்சாட்டுகள் கிளம்பியுள்ள நிலையில் நேற்றைய மாநாடு நடத்தப்பட்டது.

குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகளிலிருந்து படையினரை விலக்கும் வாய்ப்புக் குறித்து ஆராய்வதற்காக இந்த மாநாடு ஏற்பாடாகியிருந்தது.

கல்வி அமைச்சின் செயலாளர் அன்றூ சில்வா, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் க.சண்முகலிங்கம், யாழ். படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டக்கொட ஆகியோரும் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையணிகளின் தளபதிகள் ஆகியோரும் மாநாட்டில் பங்குபற்றினர்.

யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவ

(10ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மீது வேவு விமானங்கள் நோட்டம்!

## கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப்புலிகள் ஆட்சேபம்

கொழும்பு,மே14

**வன்னியில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் மீது ஸ்ரீலங்கா அரசின் ஆளில்லாத வேவு விமானங்கள் அடிக்கடி தாழ்ப்பறந்து நோட்டமிடுவதாக விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.**

**இதனை ஒரு யுத்தநிறுத்த மீறல் எனக் குறிப்பிட்டிருக்கும் புலிகள், அதுபற்றி கண்காணிப்புக் குழுவிடம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.**

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியின் வான்பரப்பில் ஸ்ரீலங்கா விமானப்படையின் ஆளில்லாது இயங்கும் தானியங்கி உளவு விமானங்கள் அடிக்கடி பறப்பது அப்பிரதேச மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் -

இதுபோன்ற - மக்களுக்குப் பீதி ஏற்படுத்தும் - நடவடிக்கைகள் நம்பிக்கையைச் கட்டியெழுப்பும் இலங்கை அரசின் முயற்சியை சீர்குலைக்கும் என்றும் -

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொண்ட்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்தி

## சமாதானச் சூழ்நிலையைக் குழப்ப சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன

### விழிப்புடன் இருக்கிறோம் என்கிறார் புலிகள் பிரமுகர்

செங்கலடி,மே14

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் மீது வீண்பழியைச் சுமத்தி, சமாதானச் சூழலைக் குழப்ப சில தீயசக்திகள் முயன்று வருகின்றன என்று புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பிரமுகர் விசு குற்றஞ்சாட்டினார்.

நேற்றுமுன்தினம் வந்தாறுமூலை ஸ்ரீமஹா விஷ்ணு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஏறாவூர் பற்று பிரதேச வர்த்தகச் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏறாவூர்பற்று பிரதேச அரசியல் பொறுப்பாளர் ரீ.குமரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் விசு மேலும் கூறியதாவது:-

"புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து அரசியல் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கல்வி, பொருளாதார நிலையை மேம்படுத்துவதே எமது பணியாகும். இப்பணிகளை மேற்கொள்ளும்போது நாம் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மேலும் எமது நடவடிக்கைகளின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மகியங்கனை ஆற்றில் மூழ்கி யாழ். இளைஞர் இருவர் பலி!

### சுற்றுலா சென்றபோது பரிதாபம்

மண்டைதீவு,மே14

தென்னிலங்கைக்கு சுற்றுலா சென்ற இரண்டு யாழ்.இளைஞர்கள் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்தச் சோகச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

யாழ்.அடைக்கல மாதா ஆலய இளையோர் மன்ற அங்கத்தவர்கள் 18 பேர் அடங்கிய குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை தென்பகுதிக்கு சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு சென்றிருந்தனர்.

அவர்கள் நேற்று மகியங்கனைப் பகுதியின் ஆற்றோரத்தில் தமது மதிய உணவு நேரத்தைக் கழித்தனர்.

அப்போது குழுவில் இடம்பெற்றிருந்த யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மனோகரன் யூட் ரஞ்சித்(வயது 29) என்பவர் கை கழுவுவதற்காக ஆற்றோரத்தில் இறங்கியபோது கால் வழுக்கி ஆற்றில் விழுந்தார். உடனே அருகில் நின்ற யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த தேவராசா சாம்சன் (வயது24) என்பவர் அவரைக் காப்பாற்ற முயற்சித்தார்.

ஆனால், அவர்கள் இருவரையுமே ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று

(10ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



குழப்பிற வேலையை வானத்திலையும் தொடங்கிவிட்டினம் போல...!

### விடுதலைப் புலிகளின் பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே14

சங்கானை, உரும்பிராய்ப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் மக்களுக்கான பொதுக்கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு செயலகம் முன் நாளை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,மே14

சொந்த இடங்களில் குடியமர அனுமதிப்பது உட்பட 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நாளை புதன்கிழமை உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக நேற்று நடந்த ஏற்பாட்டுக் கூட்டத்தில், இருபதுக்கும் மேற்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றி உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

(ஒ)

## வெட்டுப்புள்ளி விவரம் இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம்,மே14

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இஸற் - ஸ்கோர் புள்ளிகள் இன்று வெளியாகலாம்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இஸற் - ஸ்கோர் முறையில் புள்ளிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

இம்முறை 12ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட மாணவர்களைத் தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(ஒ)

## மடவளை கொலை வழக்கு:

# ரத்வத்தை, அவரது மகன்மார் உட்பட 18பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

### எஞ்சிய 21 சந்தேகநபர்கள் விடுதலை

கண்டி,மே14

மடவளை முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள் தொடர்பான 39 சந்தேகநபர்களில் 21பேர் நேற்று தெல்தெனிய நீதிவான் இனோகா ரணசிங்கவினால் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று இது தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் மீண்டும் நடைபெற்றன.

21 சந்தேகநபர்களை விடுதலை செய்த நீதிவான், எஞ்சிய 18 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, அவரது புதல்வர்களான லொஹான் ரத்வத்த, சானுக்க ரத்வத்த ஆகியோரும் இந்த 18 சந்தேகநபர்களில் அடங்குவர்.

நேற்று விசாரணை ஆரம்பமான போது, சட்டமா அதிபரின் சிபாரிசுக்கு அமைய 21 சந்தேகநபர்கள் இந்த வழக்கோடு சம்பந்தப்பட்டதற்கான சாட்சியம் எதுவுமில்லை எனவும் -

இன்றுவரை இடம்பெற்றுள்ள புலன்விசாரணைகளை ஆதாரம்காட்டி இவர்களை விடுவிக்கவேண்டும் எனவும் -

அரச தரப்பு சட்டத்தரணி அசேல வெங்கப்புலி, நீதிவான் இனோகா ரணசிங்கவிடம் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் சிபார்சுக்கிணங்க இவர்களை விடுதலை செய்யலாம் எனவும் -

தேவை ஏற்படின் இவர்கள் நீதிமன்றத்துக்கு அழைக்கப்படலாம் எனவும் -

வழக்கோடு சம்பந்தப்பட்ட சாட்சிகளை அச்சுறுத்தாதிருக்க எச்சரிக்க வேண்டும் எனவும் நீதிவானிடம் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

விடுவிக்கப்பட்ட 21 நபர்களில் மடவளையைச் சேர்ந்த எம்.வை.எம். ஹஸன், முஹம்மது றியாஸ் ஆகிய இரு சிவிலியன்களும் இடம்பெறுகின்றனர். ஏனைய 19பேரும் இராணுவ வீரர்களாவர்.

விடுவிக்கப்பட்ட நபர்கள், சாட்சிகளுக்கு எதுவித தொல்லைகளையும் கொடுக்கக்கூடாதெனவும் அவ்வாறு ஏதும் இடம்பெற்றால் இந்த வழக்கு முடியும் வரை அவர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் எனவும் நீதிவான் எச்சரிக்கை விடுத்தார். (ஒ-4)

## தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

தற்கால அரசியல் நிலைமை தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இக் கலந்துரையாடலில் தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். (ஐ)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில்,மே14

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

25ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-69)

★ ★ ★

கொக்குவில்,மே14

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் நடைபெறும். (எ-69)

★ ★ ★

சுழிபுரம்,மே14

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே14

சங்கானை வெல்வில் இலுப்பைத் தாழ் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவ தினத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை முதல் தினமும் காலை 9மணிமுதல் 11மணி வரை விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே14

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த வெளிமடைப் பொங்கல் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை வரை நடைபெறும்.

காவடிகள், கரகங்கள் தூக்குக் காவடி என்பவற்றின் மூலம் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர் (எ)

★ ★ ★

இருபாலை, கற்பகப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை நண்பகல் 12மணிக்கு இடம்பெறுகிறது. ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (ஒ)

## வேலைவாய்ப்புக் கொள்கை நாடாளுமன்றம் வருகிறது

கொழும்பு,மே14

தேசிய வேலைவாய்ப்புக் கொள்கை அடுத்தமாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதெனத் தொழிலமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

உள்ளூர் வேலை வாய்ப்புச் சந்தைகளிலிருந்தும் வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தைகளிலிருந்தும் வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகவே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'கொம்பியூட்டர் சிஸ்ரம் டிப்ளோமா' பட்டமளிப்பு வைபவத்தில் பேசுகையிலேயே தொழிலமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

## மட்டு. ரயில் பாதை அமைப்பு வேலைகள் பணமின்றி முடக்கம்

கொழும்பு,மே14

மட்டக்களப்புக்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது முடங்கிப் போயிருக்கிறது. வாழைச்சேனை வரையிலான ரயில் பாதையை மட்டக்களப்பு வரை நீடிக்கும் நடவடிக்கைகளுக்கு பணம் இல்லாததாலேயே அச்சேவையை ஆரம்பிக்க முடியாதிருக்கிறது.

வாழைச்சேனை வரையிலான ரயில் பாதை மட்டுமே திருத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதுவும் உரிய தரத்துக்கு ஏற்ப திருத்தப்படாததால் ரயில் சேவைகள் மிகவும் குறைந்த வேகத்திலேயே நடத்தப்படுகின்றன. வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் பாதை முற்றாகத் திருத்தி அமைக்கப்படவேண்டியிருக்கிறது. சுமார் 30 கோடி ரூபா இத்திருத்த வேலைகளுக்குத் தேவைப்படும் என்று ரயில்வேத் திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது.

சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயிலகளுக்குத் தேவையான ரயில் பெட்டிகளைக் கொள்வனவு செய்ய மேலும் 30 கோடி ரூபா தேவைப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இத்திருத்த வேலைகளுக்கு நோர்வே அரசின் உதவியைப் பெறுவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. (ஐ)

### விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே14

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தினால் அமரர் டாக்டர் சிவகுரு ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்காக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ கரவெட்டி கலட்டி வி.க. எதிர் வல்வெட்டி கலைமதி வி.க.

★ ஊரெழு றோயல் வி.க. எதிர் அச்செழு வளர்மதி வி.க. (எ-86)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் தடகளப் போட்டி நிகழ்வில் இன்று காலை 8 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (எ-86)

★ ★ ★

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

### வீதி விபத்தில் வயோதிபப்பெண் படுகாயம்

கன்னாதிட்டிப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் நடந்த வீதி விபத்தில் சிக்கி வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

கன்னாதிட்டியைச் சேர்ந்த வேலாயுதம் கோமதி (வயது70) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-6)

### அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய 1ஆம்,2ஆம் அணி மாணவர்களுக்கு கடல்வள பாடநெறி ஆசிரிய நியமனம் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரியகுளம் உயர் கலைக் கல்லூரியில் நடைபெற இருப்பதால் அதற்கு அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

### தொண்டமானின் பணிப்பின்பேரில்

## யாழ். நூலகப் புனரமைப்புக்கு கொழும்பிலிருந்து பொருள்கள்

கொழும்பு,மே14

யாழ்.பொது நூலகத்தின் புனரமைப்புக்காக வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்புரையின்பேரில் 4லொறிகளில் கட்டடப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சரின் பணிப்புக்கிணங்க கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரிகேடியர் சரத் முனசிங்க கட்டடப் பொருள்களை அனுப்பியிருக்கின்றார். 12ஆண்டுகளுக்குப் பின் முதன்முதலாக கட்டடப் பொருள்கள் இப்பொழுதுதான் லொறிகளில் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்று வவுனியாவை வந்தடைந்த லொறிகள் அங்கிருந்து வவுனியா அரசாங்க அதிபர் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண பொது நூலகத்தின் புனரமைப்பு வேலைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதற்கிடையே, கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் பொருள்களை வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்புவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது. (ஒ)

## அமெ. போர்க்கப்பல் இன்று புறப்படுகிறது

கொழும்பு,மே14

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருக்கும் அமெரிக்க கடற்படையின் மிகப்பெரிய ஏவுகணைத் தாங்கிக் கப்பலான 'யு.எஸ்.எஸ்.சைட்ஸ்' இன்று புறப்பட்டுச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை - அமெரிக்க நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கில் இந்தக் கப்பல் இங்கு வந்துள்ளது. 445 அடி நீளமான இந்தக் கப்பலில் 200 கடற்படையினர் பணிபுரிகின்றனர். ஹெலிகொப்டர்களை தாங்கிச் செல்லக் கூடிய இந்தக் கப்பலில் கார்பன் ஏவுகணைகள், ஸ்ராண்டட் ஏவுகணைகள், 25 மில்லிமீற்றர், 76 மில்லிமீற்றர், விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் ஆகியனவும் உள்ளன.

இந்தக் கப்பல் பற்றி விளக்குமுகமாக நேற்றுச் செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். (ஒ)

## மட்டுநகர்-ஓமந்தை பஸ் சேவை!

செங்கலடி,மே14

மட்டக்களப்பிலிருந்து ஓமந்தை வரையிலான நேரடிப் பஸ் சேவை நேற்றுக்காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நியூ ஈஸ்டன் பஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு பஸ் டிப்போவினால் இதுவரை வவுனியா வரை மட்டுமே பஸ் சேவை நடத்தப்பட்டு வந்தது.

பயணிகளின் வசதி கருதி இச் சேவை ஓமந்தை வரை நீடிக்கப்பட்டது. ஓமந்தையிலிருந்து மட்டக்களப்புக்கான பஸ் புறப்படும் என்று மட்டக்களப்பு பஸ் டிப்போ முகாமையாளர் சிதம்பரநாதன் தெரிவித்தார். (ஒ)

## சிலாபம் அம்மன் ஆலயத்தை வேறிடத்துக்கு அகற்ற முயற்சி?

### அப்பகுதி இந்துமக்கள் கவலை

சிலாபம்,மே14

எழுபது வருடங்கள் பழைமை வாய்ந்த சிலாபம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் வேறு இடத்துக்கு அகற்றப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் இந்து மக்கள் மத்தியில் பெரும் கவலை நிலவுகிறது.

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சிலாபம் நகரசபை சுகாதாரத் தொழிலாளர்களின் - குடியிருப்புகள் அப்புறப்படுத்தப்படவுள்ளன. இக்குடியிருப்புகள் சிலாபம் - குருநாகல் வீதியில் பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள சிலாபம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தைச் சுற்றிவரவே இருக்கின்றன.

இத்தொழிலாளர்களுக்கு நரியாகொட என்ற இடத்தில் உள்ள வயல் காணி வழங்கப்பட உள்ளது. புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேராவின் பணிப்புரையின்பேரில் நகரசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. குடியிருப்புகள் அப்புறப்படுத்தப்படும் பட்சத்தில் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயமும் அப்புறப்படுத்தப்படலாம் என்ற கவலை சிலாபம் இந்து மக்கள் மத்தியில் நிலவுகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிலாபம் நகரசபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் நகரசபைத் தொழிலாளர்களின் இருப்பிடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு அக்காணியில் சிலாபம் பிரதேச செயலாளர் அலுவலகம் அமைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஒ)

### பச்சிலைப்பள்ளி கூட்டுறவுச் சங்கம் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம்,மே14

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதனால் அவர்களின் தேவைகளை கருத்திற்கொண்டு நாளை புதன்கிழமை பளை நகரத்தின் 1ஆம் இலக்க கிளை நிலையமும் அதே தினத்தில் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகமும் முன்னர் இயங்கி வந்த அதே இடத்தில் திறக்கப்பட உள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ)

### அரச தொழிற்சாலை அதிகாரிகள் நாளை வருகின்றனர்

இணுவில்,மே14

அரசதொழிற்சாலையைச் சேர்ந்த 7 உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

மேற்படி குழுவினர் தொண்டமனாறு 'பறாஜ்' (நீர்த்தடுப்பு அணை) மற்றும் ஏனைய நீர்ப்பாசனத்திட்டங்களைப் பார்வையிடுவதுடன், அவை குறித்த புனரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வர் எனக் கூறப்பட்டது. (எ-ரி)

## எம்பிலிப்பிட்டியில் பஸ் கொள்ளை!

கொழும்பு,மே14

பதுளையில் இருந்து கொழும்புக்கு வந்த சொகுசு பஸ் வண்டி ஒன்றில் வழியில் கொள்ளையடிக்கப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றிருப்பதாக இரத்தினபுரி பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ் வண்டியை வழிமறித்த கொள்ளையர் அதனைப் பிரதான பதையில் இருந்து திருப்பி, குறுக்குப் பாதை ஒன்றுக்குக் கொண்டு சென்று பயணிகளிடமிருந்து பணத்தையும் தங்க நகைகளையும் கொள்ளையடித்திருக்கின்றனர்.

கொள்ளைக் கோஷ்டியில் எட்டுப் பேர் இருந்தனர் என்றும் அவர்கள் வாகனம் ஒன்றில் வந்தனர் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது.

பொலீஸார் இதுகுறித்து தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஒ)

# பலஸ்தீனத் தனிநாட்டை அங்கீகரிக்கமாட்டோம்!

## இஸ்ரேலிய ஆளும் கட்சி தீர்மானம்

ஜெருசலேம்,மே14

பலஸ்தீன தனிநாட்டை அங்கீகரிக்கப் போவதில்லை என்று இஸ்ரேலின் ஆளும் கட்சியான லிக்குய்ட கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனால் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு பாரிய இடி விழுந்துள்ளதாக வர்ணிக்கப்படுகின்றது.

இஸ்ரேலியத் தலைநகரான ரெல் அவிவ்வில் நேற்றுமுன்தினம் நடந்த லிக்குய்ட் கட்சியின் பொதுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார். தீர்மானத்தின் மீது நடந்த இரகசிய வாக்கெடுப்பில் பொதுச் சபையின் 669 உறுப்பினர்களில் 465 பேர் வரையில் அதற்கு ஆதரவாக வாக்களித்திருப்பதாகத் தெரிகிறது.

பொதுச் சபைக் கூட்டத்தின் பின்னர் பேசிய இஸ்ரேலியப் பிரதமர்-

"நான் தொடர்ந்தும் இந்த நாட்டின் தலைமைப் பதவியில் இருப்பேன். சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இஸ்ரேலினதும் அதன் குடிமக்களதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்" - என்றார்.

லிக்குய்ட் கட்சியின் இந்தத் தீர்மானத்தால் கூட்டணி அரசுக்குள் குழப்பங்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டணி அரசில் பங்கேற்கும் தொழிற்கட்சி அமைச்சர்கள் இந்தத் தீர்மானத்தை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கப்போவதில்லை. இதனால் கூட்டணி அரசு முறியும் நிலையும் ஏற்படலாம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் "இந்த விடயத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம். ஜோர்தான் ஆற்றுக்கு மேற்கே நிச்சயம் ஒரு பலஸ்தீன நாடு இல்லை. அப்படி அமைந்தால் அது இஸ்ரேலின் இறப்புக்கான அச்சுறுத்தலாகிவிடும்"- என்றார் லிக்குய்ட் கட்சியின் மூத்த தலைவரும் இஸ்ரேலின் முன்னாள் பிரதமருமான பெஞ்சமின் நெத்தன்யாகு.



லிக்குய்ட் கட்சிப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஷெரோன் உரையாற்றுகின்றார்

இஸ்ரேலின் இந்தத் தீர்மானத்துக்கு பலஸ்தீன அதிகார சபை கடும் ஆத்திரத்துடன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தின் பேரால் பலஸ்தீனர்கள் மீது தனது இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கே இந்தத் தீர்மானம் வழிவகுக்கும் - என்று பலஸ்தீன அதிகாரியான சயிப் எர்க்காத் கூறினார்.

இதேவேளை -

இஸ்ரேலியப் படைகளால் அடிக்கடி முற்றுகைக்கு உட்படுத்தப்படும் பலஸ்தீன நகர்களான பெத்தலகேம், நப்லஸ், ஜெனின் ஆகியவற்றுக்கு பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் விரைவில் விஜயம் செய்ய உள்ளார்.

ஜோர்தான் நாட்டு ஹெலியில் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. (ம)



கார்டருடன் காஸ்ரோ

## ஜிம்மி கார்டர் - காஸ்ரோ வரலாற்று ரீதியான சந்திப்பு

ஹவானா,மே14

கியூபாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்டர் நேற்று கியூப அதிபர் பிடல் காஸ்ரோவைச் சந்தித்துப் பேசினார்.

கடந்த 40 வருடங்களில் கியூபாவுக்கு விஜயம் செய்த முதலாவது அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்டர் ஆவார்.

இரு தலைவர்களிடையேயும் ஹவானாவில் இடம்பெற்ற வரலாற்று ரீதியான இந்தச் சந்திப்பு, சில மணிநேரங்கள் இடம்பெற்றது.

கார்டர் இன்று செவ்வாய்க்கிழமை உள்ளூர் தொலைக்காட்சி மூலம் கியூப மக்களுக்கு விசேட உரையாற்ற உள்ளார். அதன்பின்னர் அவர் வியாழக்கிழமை அங்குள்ள மனித உரிமைக் குழுக்களுடன் பேச்சு நடத்துவார். வெள்ளியன்று கியூபாவை விட்டுப் புறப்படுவார்.,

ஜிம்மி கார்டர் கியூபாவில் எந்த ஒருவரையும் சந்தித்துப் பேச்சு நடத்தலாம் - என்று பிடல் காஸ்ரோ தெரிவித்தார். (ம)

## விண்வெளி ஆராய்ச்சி நிலைய கூரை இடிந்ததில் 8 பேர் பலி!

மொஸ்கோ,மே14

கஜகஸ்தானில் உள்ள ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் கூரை இடிந்து வீழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது. கஜகஸ்தானில் உள்ள பைகானூர் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

260அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த கூரை இடிந்து வீழ்ந்ததாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

கூரை இடிந்து வீழ்ந்தசமயம் அங்கு பல ஊழியர்கள் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் சோவியத் ஒன்றியத்தின் காலத்தில் கட்டப்பட்டது சோவியத் உடைந்த பின்னர் ரஷ்யா பொருளாதார ரீதியில் நலிவடைந்ததால், பெரும் பணத்தை விழுங்கும் இந்த மாதிரியான விண்வெளி ஆராய்ச்சி நிலையங்களை பராமரிப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சரிவரக் கவனிக்கப்படாததே இந்த விபத்துகுரிய காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (ம)

## சதாமை பதவி கவிழ்ப்பதில் அமெரிக்கா மிகத் தீவிரம்

நியூயோர்க்,மே14

ஈராக் அதிபர் சாதம் ஹுசேயனை பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஈராகிய எதிர்த்தரப்புடன் அமெரிக்க அரசு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கப் பத்திரிகையான 'வாஷிங்ரன்போஸ்ட்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வெள்ளை மாளிகை அதிகாரிகள், சி.ஐ.ஏ அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கடந்த மாதம் ஜேர்மனியில் ஈராக்கிய குர்டிஷ் இன உயர் தலைவர்கள் இருவரைச் சந்தித்து இரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஈராக் அதிபரை பதவி கவிழ்க்கும் விடயத்தில் அங்குள்ள எதிர்த்தரப்பினர் எந்த விதத்தில் பங்காற்ற முடியும் என்பது குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஆனால் அமெரிக்க அதிகாரிகள் இந்தச் செய்தியை மறுத்துள்ளனர். (ம)

## அமெரிக்க பொப் பாடகி கைது!

நியூயோர்க்,மே14

அமெரிக்காவின் புகழ்பெற்ற பெப் பாடகியான டியோன் வோர்விக் மியாமி விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

61 வயதான வோர்விக் லொஸ் ஏஞ்சஸில் இருந்து மியாமிக்கு வந்த



சமயம் போதைப் பொருள்களை எடுத்துவந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நேற்று அவர் கைது செய்யப்பட்டார்.

வோர்விக்கின் பயணப் பையில் இருந்த உதட்டுச் சாயப் பெட்டியில் போதைப் பொருள் அடைக்கப்பட்ட சிகரெட்டுகள் இருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## குழந்தைகள் உரிமைக்கு ஆதரவாக ஒன்பது கோடி பேர் உறுதிமொழி

நியூயோர்க்,மே14

குழந்தைகளின் உரிமைகள் நலன்களுக்கு ஆதரவாக உலகம் முழுவதும் ஒன்பதரைக் கோடி பேரிடம் கையெழுத்துப் பெற்று, பல நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் உலக சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

குழந்தைகள் உரிமைக்கு ஆதரவு அளியுங்கள் என்ற கோஷத்துடன் கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி இந்த இயக்கத்தை 194 நாடுகளில் ஐ.நா. குழந்தைகள் நிதியம் தொடங்கியது. உலக நாடுகளைச் சேர்ந்த 550 குழந்தைகள் இதில் பங்கேற்றனர்.

சமாதானம், நலவாழ்வு, பாதுகாப்பு குறித்த பத்து அம்ச குழந்தைகள் நலத் திட்டத்துக்கு ஆதரவாக இன்ரர்நெற் மூலமாகவும் நேரடியாகவும் 9.5கோடி பேரிடம் அக்குழந்தைகள் உறுதிமொழிகளைப் பெற்றனர். இது உலக சாதனை ஆகும். கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இது இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உறுதி மொழிகளை ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானிடம் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கடந்த வியாழக்கிழமை வழங்கினார்.

## மடகாஸ்கரில் மீண்டும் அரசியல் கலவரங்கள்

### 6 பொதுமக்கள் பலி; பலர் காயம்

மடகாஸ்கரில் மீண்டும் புதிதாக நடந்த அரசியல் கலவரங்களில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

நாட்டின் பிரதமர் என்று தற்போது தன்னை அறிவித்துக்கொண்டுள்ள ரவலோமனானாவுக்கும் முன்னாள் அதிபர் ரட்ஸிராக்காவுக்கும் இடையிலான அரசியல் மோதலே தற்போதைய கலவரத்துக்குக் காரணம். இருவரும் நாட்டின் இருவேறு பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

இருவருக்கும் இடையிலான இந்த அதிகாரப் போட்டி காரணமாக நாட்டின பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.



அரசியல் உட்பூசல் காரணமாக வேலை இழந்து தவிக்கும் குடும்பஸ்தர் ஒருவர்

இதற்கிடையில் -

தம் இருவருக்கும் இடையில் உள்ள பிணக்கைத் தீர்ப்பதற்கு லிபிய அதிபர் முஹம்மட் கடாபி ஏற்பாட்டாளராகப் பணியாற்ற வேண்டும் என்று ரட்ஸிராக்கா கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

உலக அரங்கில்

## ஆங்ஷானின் விருப்பம்!

ரங்கூன்,மே14

மியன்மரில் 19 மாதகாலமாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்து, அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவி ஆங்ஷான் சூகி, தான் நோர்வேக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்கள் வெளிநாடு சென்றுவருவதற்குத் தன்னை அனுமதித்தால் தான் முதலில் செல்லும் நாடாக நோர்வேயே இருக்கும் என்று அவர் கூறினார்.

இராணுவ அடக்குமுறையை எதிர்த்து ஆங்ஷான் சூகி ஆற்றிய பணிக்காக 1991 ஆம் ஆண்டு நோர்வே அவருக்கு நோபல் பரிசு வழங்கிக் கௌரவித்தது. இதற்காகவே அவர் நோர்வே செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். (ம)

## அமெரிக்கா மீதான தாக்குதல் குறித்து எவ்.பி.ஐ. எச்சரிக்கை!

வாஷிங்ரன்,மே14



அமெரிக்காவின் அடுக்கு மாடிக் குடியிருப்புகள், வர்த்தக வளாகங்கள், நவீன சந்தைக் கட்டத் தொகுதிகள் மற்றும் பிரபல உணவுச் சாலைகள் ஆகியவற்றில் தீவிரவாதத் தாக்குதல்கள் இடம்பெறும் சாத்தியங்கள் குறித்து அமெரிக்கத் தேசிய புலனாய்வு நிறுவனம் எவ்.பி.ஐ. தனது அதிகாரிகளை எச்சரித் துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டு பின்னர் அமெரிக்கப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட அபு சுபைதா என்பவர் விசாரணையின்போது வெளியிட்ட தகவல்களின் அடிப்படையிலேயே எவ்.பி.ஐ. அதிகாரிகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய சகா என்று கருதப்படும் சுபைதாவிடம் பெறப்பட்ட மற்றொரு தகவலின் அடிப்படையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் வங்கிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது, சுபைதாவி டமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து எவ்.பி.ஐ.யின் உள்ளூர் அதிகாரிகளும், பயங்கரவாதத் தடுப்புப் படையினரும் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பொது இடங்கள் மீது தாக்குதல்களை நடத்த அல் கெய்டா அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக கடந்த மாதமே சுபைதா தெரிவித்திருந்ததாகவும் - ஆனால் அவர் கூறியதில் இருந்த உண்மைத்துவம் பற்றி தமக்கிருந்த சந்தேகத்தை தெளிவுபடுத்திய பின்பே தற்போதைய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாகவும்-

எவ்.பி.ஐ. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## இந்திய – அமெரிக்கப் படைகள் பாக். எல்லையில் கூட்டுப்பயிற்சி

புதுடில்லி,மே14

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பாரிய இராணுவ பயிற்சிகளை கடந்த சனியன்று பாகிஸ்தான் எல்லையோரத்தில் ஆரம்பித்தன.

பனிப்போர் காலத்தில் சோவியத் ரஷ்யாவை ஆதரித்த இந்தியா 40 வருட காலத்தின் பின்னர் இவ்வாறான ஒத்திகையில் அமெரிக்காவுடன் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

உலகின் இரு பெரிய ஜனநாயக நாடுகளும் கூட்டிணைந்த இராணுவப் பயிற்சிகள் மூலம் தமது உறவினை மேலும் பலப்படுத்தியுள்ளன. இரு நாட்டு தரைப்படைகளும் பங்கேற்கும் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் இருவார காலத்துக்கு நடைபெறும். (ம)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஏழாலை தெற்கு, சூறாவத்தையைச் சேர்ந்த செல்வி சுயானா என்பவரின் தங்கக் கைச்சங்கிலி ஒன்று செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் ஆகிய ஆலயப் பகுதியில் 12.05.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சரண்யா கல்வி நிலையம், ஏழாலை எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (3726)

இல.177, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வைச் சேர்ந்த சிவக்கொழுந்து பரமானந்தம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.302450218V), விசேட அடையாள அட்டை (இல.0901011131), சமாதான நீதிவான் அடையாள அட்டை (இல.99/07/N.P/JAF/D/061) என்பன யாழ்ப்பாணத்தில் 3ஆம் குறுக்குத் தெருவுக்கும் 4ஆம் குறுக்குத் தெருவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3724)

முருகன் கோபால் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம் (இல. 151832) 10.05.2002 அன்று புன்னாலைக்கட்டுவனுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் சந்தியில் உள்ள துர்க்கா புத்தகசாலையில் ஒப்படைத்து உதவவும். (3725)

### நாடகம்

வானொலியில் "கலைஞர் கௌரவிப்பு" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.யாழ்ப்பாணம் 4. இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6.ஒரு காதலின் கதை. (3695)

## செய்திச்சரம்

### மருந்து விநியோகம

அளவெட்டி,மே14

அளவெட்டி மத்திய மருந்தகத்துக்கான 2ஆம் கட்ட கந்தாய மருந்து வகைகள் பிராந்திய மருந்து விநியோகப் பகுதியினரால் வழங்கப்பட்டுள்ளன. (எ-13-ரி)

### கலாசார மண்டபத்துக்கு அடிக்கல்!

அளவெட்டி,மே14

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தென்மேற்கு மூலையில் கலாசார மண்டபத்திற்குரிய அடிக்கல் நடப்பட்டுள்ளது.

கலாசார நிகழ்வுகள், திருமண வைபவங்களுக்காக அமைக்கப்படவுள்ள இம் மண்டபத்திற்கு 50லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. (ம-13-ரி)

### சிரமதானம்

அளவெட்டி,மே14

அளவெட்டி அரசினர் மத்திய மருந்தகம் உள்ளிட்ட பகுதிகள் வலி.வடக்கு பிரதேச சபையின் உதவியுடன், அருணோதயக் கல்லூரி உயர்தர மாணவர்களினால் அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. (எ-13-ரி)

### பரீட்சை!

தாவடி,மே14

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு அம்பாள் விளையாட்டுக்கழகத்தினர் சமய அறிவுப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளனர்.

4 பிரிவுகளாக நடத்தப்படும் மேற்படி பரீட்சையில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் பூங்காவனத் திருவிழாவன்று பரிசில்கள் வழங்கப்படும். (எ-13-ரி)

### பணிமனை மீண்டும் சொந்த இடத்தில்

செம்பியன்பற்று,மே14

இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் இயங்கிவந்த மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நாளை புதன்கிழமை முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இது தொடர்பான வைபவத்தில் யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன் பணிமனையைத் திறந்து வைப்பார். (எ-13-ரி)

---

## நீதிமன்ற அறிவித்தல்

### மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

விசுவலிங்கம் அறிவழகன்,
பாடசாலை வீதி, கோண்டாவில்.
வழக்காளி

வழ.இல:மணநீக்கம்/299

எதிர்

அறிவழகன் பெண் கலாநிதி,
தில்லையம்புலம்,
துன்னாலைதெற்கு, துன்னாலை.
எதிராளி

10.05.2002ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அழைப்புக் கட்டளையில் தலையங்கம் மேற்குறிப்பிட்டவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை இதனால் அறியத்தரப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி.

தயாரித்தவர்:-
(க.அரியநாயகம்),
வழக்காளியின் சட்டத்தரணி
வரைவு
திகதி 13-05-2002

து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(3736)

---

## INSTITUTION OF ENGINEERS, SRI LANKA
## IESL CENTRE - NORTHERN PROVINCE

### Talk, Discussion

*Place:- MPCS Hall, K.K.S. Road, Jaffna Town.*

**1. Talk**

*Time:- 15.30hours (S.L. Time), Tuesday, the 14th of May, 2002. (Tomorrow)*

*Talk on "ROLE OF ENGINEERS IN PUBLIC AND PRIVATE SECTORS" by Eng. G.S.G. Sivapalan, DGM (Education & Training), CEB, Colombo is organised.*

**2. Discussion**

*Time:- 09.30hours (S.L. Time), Wednesday, the 15th of May, 2002. (Tomorrow)*

*Discussion on "ICTAD SYSTEM AND CONSTRUCTION GUARANTEE FUND" by Mr.Eddie De Zylva, Chief Executive Officer, OIA, Colombo is organised.*

*All members, Members of the Contractors Association and Interested persons are cordially invited, please.*

C/o CEB, No.536/1, K.K.S. Road, Jaffna.
10-05-2002 (3735)

**Secretary.**

---

## இலங்கை வர்த்தக சம்மேளனம்

### மூன்றாவது வர்த்தக குழு யாழ். விஜயம்

### மே 16ஆம், 17ஆம் திகதிகள்

தெற்கில் இருந்து 34 வர்த்தக அங்கத்தவர்களைக் கொண்ட குழு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்கின்றது.

**தூதுக்குழுவின் ஆர்வமுள்ள விற்பனைப் பொருள்கள் வருமாறு:-**

கண்ணாடி, ரயர்கள், பற்றறிகள், ஓட்டோ உதிரிப்பாகங்கள், மறுசீரமைப்புச் செய்யப்பட மெசி பெர்குஷன் டிரக்டர்கள், சிமெந்து, வாகனங்கள், எலெக்றிக் தராசுகள், காற்றோட்டம் ஏற்படுத்தும் உபகரணங்கள் (வென்ரிலேஷன் இக்குப்மென்ற்), குளிரூட்டிக் கண்ணாடி, உரம், கடதாசி, துணி வகைகள், தைக்கப்பட்ட ஆடைகள், பேஸ் பந்து விளையாட்டுக்கான தொப்பி, றபர் பொருள்கள், மீன்பிடி வலைகள், நூல்கள், பொலி புறொலின் பைகள், ஜெனறேற்றர்கள், கட்டட அமைப்பிற்குப் பாவிக்கும் இயந்திரங்கள், கணனி மென்பொருள்கள், துவிச்சக்கர வண்டிகள், இரும்புப் பொருள்கள், நுளம்பு வலைகள், கணனிகள், திருட்டினைத் தெரியப்படுத்தும் சுங்கக் கருவிகள் ஆகியன.

**2. பின்வரும் சேவைகள்:-**

கடலில் வேண்டிய சேவைகள் வழங்குதல், விமான சேவை, சுற்றுலா ஏற்பாடுகள், நிதி வழங்கும் சேவைகள், காணிகள் மற்றும் உடைமைகள் விற்பனவு, குளிர்சாதனக் கருவிகள் பொருத்துதலும் அது தொடர்பான ஆலோசனைகள் வழங்குதலும், எயர் கொண்டிஷன் ஏற்படுத்துதல், கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்குதலும், கட்டட நிர்மாண சேவைகள், வின்ட் எனெர்ஜி சிஸ்ரம் தொடர்பான சேவைகள் ஆகியன வழங்குதல்.

இந்தத் தூதுக் குழுவினைச் சந்திக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

**2002 மே மாதம் 16ஆம் திகதி**

பிற்பகல் 2.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை -
**வர்த்தக சம்மேளனமும்,**
**யாழ்ப்பாணம் கைத்தொழில் நிறுவனமும்.**
கூட்டுறவுச் சங்க மண்டபம்.
திரு. K.பூர்ணச்சந்திரன் (தலைவர்)
தொலைபேசி: 021-3088

**2002 மே மாதம் 17ஆம் திகதி**

காலை 10.00 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை -
**யாழ்.வர்த்தக சம்மேளனம்,**
165, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
திரு. R.ஜெயசேகரன் (தலைவர்)
தொலைபேசி: 021-2367

(சி-22089) **- இலங்கை வர்த்தக சம்மேளனம்.**

---

## வாசகர் திருமுகம்

### சிறைக்கைதிகளின் நிலை என்ன?

சிறைக்கைதிகள் பற்றிச் சிந்திக்க ஒருவருக்கும் மனமில்லையா? விடுதலை, விடுதலை என்று காத்திருந்து நாள்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியும் அவர்களுக்கு இல்லை விடுதலை; ஏன்?

தப்புச் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள்தான்; ஆனால் சந்தேகத்தின் பெயரில் பிடிபட்டவர்கள் என்ன பாவம் செய்தவர்கள்? மனிதனாகப் பிறந்தது குற்றமா அல்லது தமிழனாகப் பிறந்ததுதான் குற்றமா?

விடுதலைதான் கிடைக்கவில்லை. விடிவு என்றாலும் கிடைக்கட்டும் என்று அவர்கள் உண்ணாவிரதம் இருந்தும் என்ன பயன்? அருமந்த உயிரொன்றைப் பறிகொடுத்தும், அத்தோடு ஏனையோர் இரத்தவாந்தி எடுத்து மயக்கமானதுதான் மிச்சம். (நீர்கொழும்புச் சிறையில்)

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு? உறுதிமொழிகள்தான் எத்தனை தடவைகள் கொடுப்பது. உறுதிமொழி எல்லாம் வாய்ப்பேச்சோடு சரி. செயலில் ஒன்றையுமே காணவில்லை.

தயவுசெய்து, எல்லாக்கைதிகளுக்கும் நீர்கொழும்புக் கைதியின் நிலை வரும்முன் ஏதாவது விடிவு பிறக்க வழிசெய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். அவர்களும் மனிதர்கள்தான்; மரக்கட்டைகள் அல்ல. அவர்களுக்கும் சொந்தம் உண்டு; பந்தம் உண்டு; உறவுகள் உண்டு; உடன்பிறப்புகள் உண்டு. உங்களில் ஒருவராக நினைத்து செயற்படுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

*மானிப்பாய்.* **கே.வசிநிதி**

### யாழ்.பிறவுண் வீதியூடாக பஸ்சேவை நடைபெறுமா?

இன்று குடாநாட்டில் அமைதி வாழ்வு திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில், இதுவரைகாலமும் கலட்டிச் சந்தியில் இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த பிறவுண் வீதியும், கடந்த மூன்றுமாத காலமாக மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்ட நிலையில் -

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் யாழ்.பல்கலைக்கழக விடுதிகள் என்பனவும் பிறவுண் வீதியருகே இருப்பதனால் பொதுமக்களுடன் மாணவர்களும் அந்த வீதியூடான 808 இலக்க சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரிடம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு மேற்படி பஸ்சேவை குறித்து பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் பிறவுண் வீதியூடாக பருத்தித்துறை வரை சேவை நடத்தவுள்ளனர் என்று அதில் கூறப்பட்டிருந்தது. பின்னர் அந்த சேவை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி வெளியாகியிருந்தது. எனவே பிரதேச மக்கள் நலன்கருதி சபை இப்பகுதிக்கான போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்குமா?

*கொக்குவில்.* **மா.ஜெகராசா**

### தென்மராட்சி புனரமைப்புக் குறித்து முற்கூட்டியே திட்டமிடல் அவசியம்

2000ஆம் ஆண்டு தென்மராட்சி யுத்த பூமியாக மாறியபோது பொருளாதார வளமும், கலாசாரப் பண்பாடுகளும் அழிக்கப்பட்டன. வந்தோரை உபசரித்த பூமியாகவும், குடாநாட்டுக்கே நெல், காய்கறி, தேங்காய் போன்றவற்றை வழங்கும் விவசாய பூமியாகவும் இது விளங்கி வந்தது. இதன் தாக்கத்தை விலை உயர்வுமூலம் நாமே நேரடியாக அறிந்துகொள்ளலாம்.

யுத்த மேகம் விலகியுள்ள நிலையில் இப்பகுதியின் புனரமைப்பும், மீள்கட்டமைப்பும் திட்டமிடப்படவேண்டும். தென்மராட்சியின் மேற்குப் புறப்பகுதிகளான சாவகச்சேரி நகர், நுணாவில், கல்வயல், மட்டுவில், தனங்களப்பு, நாவற்குழி பகுதிகளே மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவை.

எனவே, இவற்றின் புனரமைப்பு மீள்குடியேற்றம் என்பன தென்மராட்சி பிரதேச செயலரின் தலைமையில் ஒருமுகப்படுத்தப்படவேண்டும். நஷ்ட ஈடுகளும், மானியங்களும் விரயமாக்கப்படக்கூடாது. உதவி வழங்கும் அமைப்புகள், பிரதேச செயலர், கிராமமட்ட பொது அமைப்புகளுக்கு இடையே முக்கூட்டுத் தொடர்பு இருக்கவேண்டும்.

கிராமமட்ட பொது அமைப்புகளினூடாக பொதுமக்களுடன் தொடர்புபட்ட ரீதியில் புனரமைப்புகள் திட்டமிடப்படுவதை பிரதேச செயலர் கண்காணிக்கவேண்டும். தனிப்பட்ட மனிதர்களும், சில பிரமுகர்களும் செல்வாக்குச் செலுத்துவதைத் தடுத்தல் மூலமே சரியான திசையை நோக்கி இப்பணியை எடுத்துச் செல்லலாம். எல்லாச் செயற்பாடுகளும் பகிரங்கமாக, முன்னரே திட்டமிடப்பட்ட ஒழுங்குவிதிப்படி நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

*கல்வயல்.* **கல்வயல் சமூகசேவா நிலையம்.**

---

"சமாதான முயற்சிகள் வெற்றிபெற இறை ஆசி வேண்டி
நெடுந்தீவு - தலைமன்னார் கடலை நீந்திக் கடத்தல்"
*இதன் பிரதிபலிப்பாக மருதனார்மடம் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தும்*

## மாபெரும் இசை விருந்து....

இணுவையூர் பொன்கீதாலயா இசைக்குழுவின் ஆதரவுடன்
தென் இந்தியாவின் புகழ்பெற்ற "சாதகப் பறவை"
இசைக்குழுவின் பிரபல பாடகர்

### T.தேவராஜனும்

கொழும்பு மாநகரில் புகழ்பெற்ற **"ப்ரண்ட்ஸ்"**
இசைக் குழுவினரும் இணைந்து வழங்கும் ராக மழை...
பட்டிமன்றம்: **"மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு"**
**வழங்கும் "சோறா? சுதந்திரமா?"**

*பாட்டுக்குப்பாட்டு (போட்டி நிகழ்வு) பங்குகொள்ள விரும்புவோர் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.*
*பெறுமதிமிக்க பரிசில்கள் உண்டு.*

*காலம்:* **25.05.2002 சனிக்கிழமை பி.ப.5.00 மணி**
*இடம்:* **இராமநாதன் கல்லூரி மைதானம், மருதனார்மடம்.**

முயற்சி உடுவையூரான்
K.ரகுநாத்

S.தர்மசீலன்,
சிவமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
செட்டி வீதி, இணுவில் மேற்கு. (3733)

உதயன்

## பிரதமரின் பற்றுறுதி தளர்வுறுகிறதா?

சமாதான முயற்சிகளுக்கு எதிராகத் தற்போது தெற்கில் கிளப்பப்பட்டுவரும் இனவாதக் கூச்சலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பலியாகிவிட்டாரா? இனவாத சகதிக்குள் அவரும் வீழ்ந்துவிட்டாரா?

ஓரிரு தினங்களுக்கு முன்னர் மாத்தறையில் நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில் அவர் ஆற்றிய உரை இத்தகைய சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

"நாட்டிலுள்ள பிரதேசங்களை பாரம்பரிய தாயகங்களாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இலங்கைதான் எல்லோருக்கும் ஒரே தாயகம். தனியான தாயகம் பற்றி புலிகளுடன் பேசமாட்டோம்" - இப்படிக் கூறியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

கடந்த இரண்டு பொதுத்தேர்தல் காலங்களிலும், பின்னர் கடந்த வருட இறுதியில் ஆட்சிக்கட்டை கைப்பற்றியபோதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற விடயத்தில் அவர் அளவுக்கு அதிகமான பற்றுறுதியை வெளிப்படுத்தி வந்தார். அதன் பின்னர் கூட, விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தபோதும் இனப்பூசலுக்குத் தீர்வுகாண்பதே தமது ஒரே நோக்கு என்ற உறுதிப்பாட்டில் அவர் தளர்வின்றியே இருந்துவந்தார்.

ஆனால் அண்மைக்காலத்தில், இந்த சமாதான முயற்சிகளுக்கு எதிராகத் தெற்கில் பேரினவாதக் கூச்சல் எழுந்தபோது அமைதிகாத்து - அடக்கி வாசித்து வந்த - பிரதமர், இப்போது ஒரு குண்டைத் தூக்கிப் போடுவதுபோல ஈழத்தமிழரின் தாயகக் கோட்பாடு என்ற அடிப்படை விடயத்தையே காலில் போட்டு மிதிக்கும் அளவுக்குக் கீழ் இறங்கிவிட்டார்.

இது சமாதான முயற்சிகளை முன்னகர்த்தும் அவரது தந்திரத்தின் ஒருபகுதியா? அல்லது உண்மையில் பேரினவாத நிர்ப்பந்தத்திற்கு அவர் அடிபணிந்துவிட்டதன் விளைவா? - இதுதான் இப்போதுள்ள கேள்வி.

சரியோ, பிழையோ இந்த சமாதான முயற்சிகளை முன்னகர்த்தி, நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டுவதாயின் பிரதமர் ரணிலின் அரசு தொடர்ந்து பதவியில் இருப்பது அவசியம். ஆனால், சமாதான முயற்சிகளையும் பிரதமர் ரணிலின் அரசையும் அரசியல் ரீதியாக எதிர்க்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தற்போதைய நிறைவேற்று அதிகாரம் இருக்கும்வரை ரணிலின் அரசின் தலைக்குமேல் எந்தநேரமும் கத்தி தொங்கிக்கொண்டே இருக்கும்.

பொதுத் தேர்தல் ஒன்று நடந்து ஓராண்டு முடிந்த பின்னர், பதவியிலிருக்கும் அரசைத் தாம் விரும்பிய எந்த நேரத்திலும் கலைக்கும் அதிகாரம் தற்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு உண்டு. இந்த அதிகாரம் ஜனாதிபதியின் கையிலிருக்கும்வரை ரணிலின் அரசு தொடர்ந்து தப்பிப் பிழைப்பதோ,சமாதான நடவடிக்கைகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதோ கேள்விக்குரியவையே.

அடுத்த ஏழுமாத காலத்தில் இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பு ஜனாதிபதி சந்திரிகாவின் கைக்கு வந்துவிடும். அதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டிவிட வாய்ப்புகள் இல்லை.

எனவே, தமது சமாதான முயற்சிகளை செயலுருபெறச்செய்வதாயின், இந்த அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து பறிப்பது பிரதமர் ரணிலுக்கு அத்தியாவசியமானதாகின்றது.

அதற்கு அவர் அரசமைப்புத் திருத்தம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும். அரசமைப்பைத் திருத்துவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அவருக்குத் தேவை.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அத்தகைய ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவின் பொ.ஐ. முன்னணியிலுள்ள - எதிர்க்கட்சிகளின் தரப்பில் உள்ள - குறைந்தது இருபது எம்.பிக்களையாவது ரணிலின் ஆளும் கட்சி வளைத்துப்போட வேண்டியிருக்கும்.

பேரினவாதக் கோஷத்தின் மூலம், தனது தரப்பு எம்.பிக்களைக் கட்டிவைக்கவும் -

ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் -

முயன்றுவருகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

எனவே, அவரது அணியிலிருந்து கணிசமான எண்ணிக்கையான எம்.பிக்களை வளைத்துப் பிடித்து, அவரது கட்டிலிருந்து விடுவித்து, தமது தரப்புக்கு இழுக்க பேரினவாதப் போக்கோடு சேர்ந்து, சற்று வளைந்து கொடுத்து ஓடவேண்டிய தேவை பிரதமருக்கு உண்டு.

பிரதமரின் மாத்தறைப் பேச்சு இந்த வகைக்குள் அடங்கும் என்றால் அதைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்துப் போவதே தமிழர்தரப்புக்கு நல்லது.

ஆனாலும் -

"நாட்டிலுள்ள பிரதேசங்களைப் பாரம்பரிய பிரதேசங்களாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம" - என்ற பிரதமரின் தற்போதைய கூற்றில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அடிப்படை அம்சம்தான், இதுவரை காலமும் வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் கபளீகரம் செய்யப்பட்டதற்கு - கபளீகரம் செய்யப்பட்டு வருவதற்கு - காரணம் என்பதையும் தமிழர் தரப்பு மறந்துவிடக்கூடாது.

இந்தத் திட்டமிட்ட நடவடிக்கையை அங்கீகரிக்கும் வகையில் உண்மையில் பிரதமர் ரணிலின் அடிமனதிலிருந்து இந்தப் பேச்சு வந்திருக்குமானால் அதற்கான விளைவை அவர் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அனுமதி இல்லாமல் தனியார் பஸ்சேவை

## சம்மேளனம் பிரதமரிடம் முறையீடு

கொழும்பு,மே14

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கிடையிலான பயணிகள் போக்குவரத்துக்கான அனுமதி கிடைக்காமலேயே தனியார் பஸ்கள் இந்த சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இது சட்ட விரோதமானது.

- இவ்வாறு தனியார் பஸ் சம்மேளனம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சம்மேளனம் கேட்டுள்ளது.

இதேவேளை -

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அதிநவீன சொகுசுப் பேருந்துகள் கடந்த சில நாள்களாக சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

கொழும்பில் முக்கியமாக தமிழர் பெரும் எண்ணிக்கையில் வாழும் வெள்ளவத்தை, தெஹிவளைப் பகுதிகளில் இருந்து தனியார் சொகுசு பஸ் சேவைகள் தற்போது தினமும் நடைபெற்று வருகின்றன.

முதலில் சிறிய குளிரூட்டப்பட்ட பஸ்களே யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபட்டுவந்தன. ஆனால் தற்போது அதிநவீன சொகுசு பஸ்களும் சேவையில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தொலைக்காட்சி வசதி, மலசலகூட வசதியுடன் கூடிய அதிசொகுசு பஸ் வண்டிகள் வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றன.

இந்த பஸ்ஸிற்கான கட்டணமாக ஆயிரத்து நூற்று ஐம்பது ரூபா அறவிடப்படுகிறது.

இதுதவிர, சாதாரண பஸ்களும் குளிரூட்டப்பட்ட பஸ்களும்கூட, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுப் புறப்பட்டுச் சென்றன. (ம)

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விரைவில் இந்திய வாகனங்கள்

கொழும்பு,மே14

இதுவரை வாகனங்கள் கிடைக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியாவில் இருந்து வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட பல இந்திய வாகனங்கள் அரசுடைமைகளாக்கப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் திருப்பி ஒப்படைக்கப்படாமல் உள்ளன. ஒப்படைக்கப்பட்ட பல வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதடைந்துள்ளன. இதனாலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உடனடியாக வாகனங்களை வழங்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதை நிர்மாணிக்கும் செலவு 1,100 கோடி ரூபா

## கொந்திராத்து வழங்கியதில் பெரும் ஊழல்

கொழும்பு, மே13

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதை நிர்மாணிப்பில் ஒரு கிலோ மீட்டர் தூரபாதையை நிர்மாணிப்பதற்கான செலவு சுமார் 44 கோடி ரூபா. 25 கிலோ மீட்டர் தூரமான அப்பாதையை நிர்மாணிப்பதற்கான முழுச்செலவு 1,100 கோடி ரூபா.

முன்னைய பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தினால் கொரிய நிறுவனம் ஒன்றுக்கு இதற்கான கொந்திராத்து வழங்கப்பட்டிருக்கிறது. கொந்திராத்து ஒப்பந்தத்தின்படியே இந்த விவரங்கள் இப்பொழுது அம்பலத்துக்கு வந்திருக்கின்றன.

கேள்விப் பத்திரம் எதுவும் கோரப்படாமல் இந்த கொந்திராத்து வழங்கப்பட்டிருக்கிறது.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இவ்வளவு பெரும் செலவிலான ஒரு கொந்திராத்து வழங்கப்பட்டது கிடையாது என்றும் -

ஊழல்கள் மலிந்த ஒரு கொந்தி ராத்து இது என்றும் - பொறியியலாளர்கள் கூறுகின்றனர்.

முன்னைய அரசின் இறுதிக் காலத்தில் இதற்கென அவசர அவசரமாக கொரியா நிறுவனத்துக்கு 400 கோடி ரூபா செலுத்தப்பட்டிருப்பதும் விசாரணைகளில் தெரிய வந்திருக்கிறது. (ம)

### மாதகல் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்கு

## அனுமதி பெறும் முறையை நீக்கிவிடுமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,மே14

மாதகல் இந்து மயானத்தில் சடலங்களைத் தகனஞ் செய்வதற்கு பொன்னாலையில் உள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் முன் அனுமதிபெறவேண்டும் என்ற நடைமுறையை நீக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மாதகல் கடற்கரைப் பகுதியிலுள்ள மேற்படி இந்து மயானத்தில் சடலங்களைத் தகனஞ்செய்யவேண்டுமானால் கடற்படையினரிடம் அதற்கான அனுமதி பெறவேண்டும் என்ற நடைமுறை கடந்த பல வருடங்களாக இருந்து வருகின்றது. இதனால் இங்குள்ள இந்துக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது சமாதான சூழல் நிலவிவருவதால் மயானத்தைப் பயன்படுத்த முன் அனுமதி பெறவேண்டும் என்ற நிபந்தனையை நீக்கவேண்டும் என்று மாதகல் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நடைமுறையை நீக்கி உதவுமாறு மாதகல் பகுதியிலுள்ள இந்துசமய நிறுவனங்களும் கேட்டுள்ளன. (ம-135)

### சமாதான முயற்சிகளின் போது

## எந்தக்கட்டத்திலும் புலிகள் அரசை ஏமாற்றவில்லை!

### அமைச்சர் மொறகொட தெரிவிப்பு

கொழும்பு,மே14

தற்போதைய சமாதான முயற்சி களின்போது, எந்தவொரு கட்டத்திலும் அரசு விடுதலைப் புலிகளால் ஏமாற்றப்படவில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் மலிந்த மொறகொட. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கணக்காளர் முகாமைத்துவக் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுக்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றி அரசுக்கு நன்கு தெரியும். அதில் ஒரு சிறிய தவறும் ஏற்பட நியாயமில்லை.

தான் தீவிரமான போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருக்கிறேன் என்பது பிரதமருக்கு நன்கு தெரியும். அந்த முயற்சியில் அவர் சாதனையை நிலைநாட்டுவார் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை - என்றார்.

### 20 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு

# தமிழகப் பேராசிரியர்கள், பேச்சாளர்கள் குழு எதிர்வரும் 18ஆம் திகதி இலங்கை வருகிறது

## யாழ்ப்பாணத்திலும் அவர்களுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்,மே14

தமிழகத்தைச் சேர்ந்த தமிழறிஞர்கள், பேச்சாளர்கள் அடங்கிய குழுவொன்று 20 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தவார இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்புக்கு வருகை தரவுள்ள மேற்படி குழுவினர் தொடர்ந்து மூன்று தினங்கள் அங்கு தங்கியிருந்து பல்வேறு வைபவங்களிலும் பங்குபற்றுவர். கொழும்புத் தமிழ்ச் சங்கம், விவேகானந்த சபை என்பவற்றில் இவர்களுக்கு வரவேற்பும் அளிக்கப்படும்.

பின்னர் 21ஆம் திகதி வவுனியாவுக்கு வரும் இந்தக் குழுவினருக்கு வவுனியா இந்து இளைஞர் மன்றத்தினரால் வரவேற்பு அளிக்கப்படும். வவுனியாப் பகுதிப் பாடசாலைகளில் தமிழகப் பேச்சாளர்கள் நிகழ்த்தும் விசேட பேச்சுக்கள் இடம்பெறும்.

தொடர்ந்து 22ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் இந்தக் குழுவினருக்கு கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் மன்றம் மற்றும் பொது அமைப்புக்களினால் வரவேற்பு அளிக்கப்படும். பின்னர் இந்தக் குழுவினர் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வர்.

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் வரவேற்கப்படும் இந்தக்குழுவினர் தொடர்ந்து 3 தினங்கள் இங்கு தங்கியிருப்பர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், நல்லை ஆதீனம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மேற்படி குழுவினரால் விசேட பேச்சுக்களும் நிகழ்த்தப்படும்.


தொடர்ந்து 26ஆம் திகதி மன்னாருக்குச் செல்லும் இந்தக் குழு வினர் பின்னர் அநுராதபுரம், திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, கதிர்காமம், பதுளை, கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு அடுத்த மாதம் 8ஆம் திகதி தமிழகம் திரும்புவர். (எ)

### நாளை

வைகாசி 01
புதன்கிழமை
(15.05.2002)
திதி : திருதியை
மாலை 5.27 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பிற்பகல் 5.30 வரை.
சுபநேரம் : 4.23 - 5.53
ராகுகாலம்: 11.53 - 1.23
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்க்கை என்பது ஒருவன் தனக்காக வாழ்வதாகாது; நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும்.








• 60 சிசி 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• கிக் மற்றும் ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 125 சிசி 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 74 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ




• 100 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




• 111.6 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




• 110 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா, சிக்கனமா, அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். அத்துடன் கீழ் காணப்படும் வியாபாரிகளிடம் நீங்கள் எமது அனைத்துவகை பஜாஜ் மோட்டார் சைக்கள்களையும் பெற்றுக்கொளலாம்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

# DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** எஸ். யாசோதரன், ஏ-16, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2798
எம்.பி.சி.எஸ் யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2587
குறிஞ்சி டிரேடர்ஸ், இல. 6, 1ம் மாடி மொடன் மாக்கட் கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

(C-21934)

# ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதமாகிவிட்ட தமிழ்ப் பெண்கள் மீதான வல்லுறவுகள்

**பிரான்ஸில் இருந்துவெளியாகும் எரிமலை பத்திரிகை[illegible] மார்ச் மாத இதழில் வெளியான தொடர் கட்டுரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது. மிகுதி பிறிதொரு சமயத்தில் பிரசுரமாகும்.**

கடந்த வருடம் BBC தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் பிரபல நிறுவனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, பெருந்தொகைப் பணம் செலுத்தி செவ்வி வழங்கிய ஸ்ரீலங் காவின் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க வெளியிட் டிருந்த வாக்குமூலங்கள் முழு உலகை யுமே முட்டாளாகக் கருதிவிட்ட அவ ரின் அசட்டைத்தனத்தை மீண்டும் நிரூபித்துள்ளபோதும், உண்மைக் குப் புறம்பான - முற்றிலும் வழாத மான - அவரின கூற்றுகளை ஒளி பரப்பி, தமிழீழ மக்கள் மனங்களில் தனக்கிருந்த மதிப்பிற்கு இழுக்குத் தேடிக்கொண்டது அந்த நிறுவனம். ஏனெனில், தமிழ்மக்கள் இன்றுவரை BBC செய்தி நிறுவனத்தின் நடு நிலைப்போக்கு மீது நல்ல நம்பிக்கை யும் சிறந்த அபிப்பிராயமும் வைத் திருந்தார்கள் என்பதுதான் உண்மை. ஆயினும் சர்வதேச மன்னிப்புச் சபை யால் ஸ்ரீலங்கா அரச படைகளால மேற் கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் கள் பற்றிய ஆதாரபூர்வமான கண்ட னத்தையும் வெளியிட்டதன்மூலம தனது பக்கச்சார்பற்ற தன்மையை வெளிக்காட்டியிருப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளவேண்டியிருக்கின்றது. தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் இல்லா தொழிக்கப்பட்டுவிட்டன. மனித உரிமை மீறல்களை தனது அரசு செய்வ தில்லை. தமிழ் பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடையை தான் ஆட் சிக்கு வந்த எட்டுத் தினங்களில் முற்றிலுமாக நீக்கிவிட்டேன் இது வரை ஒரேயொரு பாலியல் வல்லு றவு சம்பவம்தான் தனது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றுள்ளது என் றெல்லாம் அப்பட்டமான, அசிங்கமான பொய்களைக் குவித்து கூச்சமுமின்றி ஒரு மாண்புமிகு ஜனாதிபதி அவர் கள் உரைப்பதை ஒளிபரப்புவதுகூட ஊடக ஸ்தாபனத்திற்கு இழுக்குத் தேடும் செயலாகவே கருதப்பட இட முண்டு. அல்லது இத்தகைய ஊட கங்களைத் தன் பிரசார சாதனமாகப் பயன்படுத்திவிடலாம் என்று சந்திரிகா எண்ணியதை நிறைவேற்றித் தரு கின்றனவா என்றும் சந்தேகிக்க இட மேற்படுவதில் வியப்பில்லை. செவ்வி யின் போது கேட்கப்பட்ட கேள்வி களுக்கு அவர் பட்ட திணறலையும் முற்றிலுமே அப்பட்டமான பொய்க ளைக்கூறி, மனித உரிமை அமைப் புக்களின் அறிக்கைகள் மற்றும் நிரூபிக்கப்பட்ட ஆதாரங்களை அடித்து மறுக்கும் அவரின் அநாகரிகமான செயலையும், 'பிசாசு கூட பைபிள் வசனம் பேசும்' என்ற பழமொழியைப் போல் வரலாற்றுச் சம்பவங்களுடன் ஒப்பிடுதல் போன்ற அருகதையற்ற நடவடிக்கைகளையும் அப்படியே படம் பிடித்துக்காட்டிய வகையில் அந்நிறுவனம் பாராட்டப்படவேண்டும். இவற்றை தனிமனிதர்கள் மட்டுமன்றி முழு உலகுமே உடனடியாகப் புரிந்து கொண்டு முகம் சுழித்தது. இதனால் தானோ என்னவோ அவரின் கருத் துக்கள் புறக்கணிக்கப்பட வேண்டி யவை என்ற ரீதியில் ஏனைய செயதி ஊடகங்கள் அவற்றுக்கு முக்கியத் துவமோ பிரபலமோ கொடுக்க வில்லை. எனினும் வன்னி மக்கள், அதாவது முக்கியமாக சந்திரிகா அரசின் ஒவ்வொரு திட்டமிட்ட இன அழிப்பு செயற்பாடுகளின் நகர்வு களின்போதும் நசுக்கப்பட்டு நலிந்து போய்க்கொண்டிருக்கின்ற வன்னி வாழ் தமிழ்மக்களின் சார்பாக வன் னிப் பிரஜைகள் குழு ஆட்சேபம் தெரிவிக்கத் தவறவில்லை. அவர் கள் ஆட்சேபித்திருப்பது பண்டார நாயக்க குடும்ப பாரம்பரியமாக தற் போது சந்திரிகாவிடம் வந்திருக்கும் இனத்துவேச அரசியலின் இராஜதந் திரமான பொய்யுரைத்தலை மட்டு மல்ல, போலித்தனத்தை பொய்யை, பொய்யென்று உணர்ந்து கொண்டு அதனை ஒரு பொருட்டாகக் கருதி ஊடகங்கள் வெளியிட்டிருந்தமை யையும் சேர்த்துத்தான். கிட்லரின் பிரசார செயலரான கொயபல்ஸ் கொண்டிருந்த புகழையும் விஞ்சி விட்டார் சந்திரிகா அம்மையார் என் பதை வெளிக்காட்டத்தான் ஊடகங் கள் அப்படிச் செய்திருக்கலாம். எது எப்படியிருந்தபோதிலும் தமது கடமை களை ஓரளவாவது நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற அரசுகளுக் கெதிராகக் கண்டனத்தையாவது இன்று வெளியிட்டு வருவது பாராட் டப்படவேண்டியது. சமாதான முயற் சிகள் கனிந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலப்பகுதியில் நடந்துபோன வற்றை மறந்துவிடத் தமிழ்மக்கள் தயாராகின்றபோதிலும், பாலியல் வல் லுறவு போன்ற அநாகரிகங்கள் என் றுமே மறக்கப்படமுடியாதவை. ஏனெ னில் இனவாத வெறியர்களால் பாதிக்கப்பட்டவர்களாகிய தமிழ் இளம் பெண்களுக்கு நிச்சம் நீதி கிடைத் தாக வேண்டும். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட அவர்களது வாழ்க் கைக்கு நஷ்டஈடுகொடுத்துவிட முடி யாது போனாலும் இனிமேலாவது இவை நடைபெறுவது தடுக்கப்பட் டாகவேண்டும்.


ஸ்ரீலங்காவில் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆட்சி ஆரம்பித்த காலம் முதற்கொண்டு சர்வசாதார ணமாக இருக்கின்ற இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஜனாதிபதி சந்திரிகா வின் ஆட்சியிலேயே இலங்கைத் தீவு வரலாறு காணாத இன அழிப்பு செயன்முறைகளையும் அவற்றிலும் அதியுச்சமான - அதிஅகோரமான - அதிகேவலமான - பாலியல் வல்லு றவுச் சம்பவங்களையும் கண்டிருக் கின்றது. மனித உரிமை அமைப்புக் கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் புனர்வாழ்வு நிறுவனங்கள், கண்டனப் பேரணிகள், கண்டன அறிக்கைகள் என்பவற்றால் இது நிரூபணமாகிக் கொண்டிருப்பதை யும் உலகம் அறியாமல் இல்லை. நிலைமை இப்படியிருக்க, தனது ஆட் சிக் காலத்தில் ஒரேயொரு பாலியல் வல்லுறவுச் சம்பவம் மட்டுமே இடம் பெற்றது என்றும், அதற்குரிய குற் றவாளிகள் தண்டிக்கப்பட்டிருப்பதா கவும் அபத்தமான பொய்யைக் கூறி, இவ்வாறான அசிங்கங்களைப் போர்த்தி மூடிவிட முனையும் சந்தி ரிக்கா அவர்களின் செயற்பாட்டை எந்த மனிதாபிமானமுள்ளவனும் மன் னிக்க மாட்டான். ஜனாதிபதி என் னும் நிலையைவிட்டு, சந்திரிகா அவாகள் ஒரு குடும்பப் பெண், ஒரு தாய், ஒரு பாதிக்கப்பட்ட விதவை, இளம் பெண் பிள்ளையின் அன்னை என்ற ரீதியில் அவர் இப்படியான பாலியல் வக்கிர கலாசாரத்திற்கு வக்காளதது வாங்குவதன்மூலமாக, அதனை மேலும் வளர்த்துவிடத் துணைநிற்பதைவிட மோசமானது எதுவுமிருக்கமுடியாது.

தமிழினத்தின் மீதான இன அழிப்பைப் பல ஆண்டு காலமாக பற்பல வழிகளிலும் பரிமாணங்களி லும் மேற்கொண்டுவரும் ஸ்ரீலங் காவின் சிங்களப் பெரும்பான்மை அரசு ஈற்றில், இவ்வாயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டுள்ளது. தமிழரின் தனித்துவத்திற்கும் பெரு மைக்கும் தன்னிறைவிற்றும் எவை யெவை மூலகாரணங்கள் என்பதை ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொண்டு அவற்றில் கை வைப்பதன் மூலம் நீண்ட கால அடிப்படையிலா வது தமிழினத்தின் அடையாளத் தையும் தன்னிகரில்லாத சிறப்பிற் கும் தளராத வீரத்திற்கும் காரண மான இனத்தூய்மையையும் சிதைத் துவிடலாம் என்று கீழ்த்தரமான, குறுக்கு வழியில் சிந்திக்கத் தொடங் கியது. அதனடிப்படையில்தான் பேரி னவாதத்தின் இன அழிப்புப் படலத் தின் சதிநாசகார வியூகம் படிப்படி யாக வாழைப்பழத்தில் ஊசிபோல நகர்த்தப்பட்டது.

இலங்கைத் தமிழ்ர்கள் சிங்கள வர்களை விட கல்வியறிவில் மேம் பட்டிருப்பதையும் அதிக தொழில் வாய்ப்பைப் பெறுவதையும் பொறுக் கமாட்டாத சிங்களத் தலைமை தமிழ ரின் அறிவுப் பொக்கிசமான யாழ். நூலகத்தை எரியூட்டியது. அடுத்து பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியில் கைவைத்தது, இது கல்வியறிவு டைய தமிழ்ச் சமுதாயம் இனியும் வளரக்கூடாது என்ற வெறியின் வெளிப்பாடுகள்.

தமிழர்களின் பாரம்பரிய பூமிகள் எங்குமே - தமிழரின் பூர்வீக நிலங் களில் - தம்மினத்தாரைக் குடியேற்று வதன்மூலம் மேலும் படிப்படியாக நிலத்தை ஆக்கிரமித்துவிடலாம் என்ற ஆதிக்க குணத்தின் வெளிப் பாடு இது.

தனித்துவம்கொண்ட தமிழ்



மொழியே தமிழரின் அசைக்கமுடி யாத அடையாளம் [illegible] அறிந்து கொண்டதன் விளைவு, [illegible] யில் இருந்து சிறுகச்சிறுக தமிழ மொழியை ஒதுக்கிவிடும் நோக்கோடு சிங்களமொழி [illegible] ஆட்சி மொழியாக் கப்பட்டமையும், இதன் அடுத்த கட் டமே தனிச் சிங்களமே ஆட்சி மொழி யென பிரகடனப்படுத்தப்பட்ட செயற் பாடு. தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக [illegible]துவதன் மூலம் தமிழினம் இழி[illegible]ன இனம் என்னும் எண்ணப்பாங்கை இலங்கையில் வாழும் ஏனைய இனங்கள் மத்தி யில் ஏற்படுத்தும் பொருட்டு வெளிப் ப[illegible]வே பாரபட்சம் காட்டத் [illegible]பது அரசு. அத்துடன் நின்று விடாமல் உணவு, மருந்து, கல்வி வசதிகள், வேலை வாய்ப்புக்கள் உட்பட எல்லாத்தையுமே மட்டுப் படுத்தி தமிழினத்தை நலிவடைய வைக்கும் பிரயத்தனத்தில் இறங் கியது. இதன் மூலம் 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற தமிழினத்தின் திடசிந்தையை உடைத்தெறிந்து விடலாம் என்று கனவுகண்டது. இவற் றிற்கெல்லாம் மேலாக, மயிர் நீப் பின் உயிர்வாழா கவரிமான் அன்ன தமிழினத்தின் மறஞ்சார் மானத்திற் கும், துவண்டே போகினும் துளியெ னும் கறைபடாது துயர் தாய்மைக் கும். திமிர்ந்த ஞானச் செருக்கிற்கும், காரணமாயிருப்பது தமிழர்கள் தொன்றுதொட்டு பேணிவரும் ஒழுக் கமும் கட்டுக்கோப்புமே என்பதை உணர்ந்துகொண்ட சிங்களப் பேரின வாதம் ஆற்றாமையுடன் தமிழரால் உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்கத்தை சிதைத்துவிடச் சித்தம்கொண்டது. இதன் விளைவே வெளியில் தெரி யாத வகையில் நன்கு திட்டமிடப் பட்ட கலாசார சீர்கேடுகளை சிறிது சிறிதாகப் புகுத்தி வெற்றிகண்டு விடலாம் என்றே நம்பியது. இந்த நோக்குடன் சிங்கள இராணுவம் [illegible]ந்து [illegible] பிரதேசங் களை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. மது, போதை [illegible], சினிமா, நீலத் திரைப்படம், தவறான பாலியல் தொடர் புகள் என்று தமிழ் கலாசாரத்தில் என்றுமே இல்லாதவை இலவசமாக அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றிற் கெல்லாம் முடிவைத்தாற் போல கட்ட விழ்த்துவிடப்பட்டதுதான் பாலியல் வல்லுறவும் பாலியல் துன்புறுத்தல் களும். 83 காலப்பகுதியில் சிவில் உடையுடன் [illegible]த்தனத்தில் ஈடு பட்ட அதே இராணுவத்தினர் இன்று சீருடைகளுடனேயே தம் கைவரி சையைக் காட்டத் தொடங்கி விட்ட னர். இதற்கு ஆவன செய்து கொடுத திருந்தது சிங்களப் பேரினவாத அரசு. அதிலும் குறிப்பாக சந்திரிகா அம்மையாரின் அரசு. எத்துணை ஆசை காட்டியும் மோசம் போய் விடாத தமிழ்ப் பெண்களின் கற்பை யும் மனிதத்தையும் சூறையாடுவதற்கு சிறந்த ஆயுதம் பாலியல் வல்லு றவே என்று சிங்களப்படைகளுக்கு புகட்டப்பட்டது. நேர்மையான அரசின் அனுசரணையுடன், அதுவும் ஒரு பெண், அதிலும் இரு பிள்ளைகளின் தாய் ஒருவரின் ஆட்சியில்தான் இதன் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந் துள்ளது. அன்று காடையர்கள் பாலி யல் வல்லுறவின் பின் தடயததை அழிப்பதற்காக வல்லுறவிற்குள்ளான பெண்ணை கொலைசெய்து ஆற் றில் போட்டுவிட்டு தலைமறைவா னார்கள். இன்றோ, இராணுவச் சீரு டையுடன் இராணுவ காவலரணில், பொலீஸ் நிலையத்தில், நடுவீதியில் இப்படி வெட்ட வெளிச்சமாக பாலி யல் வல்லுறவை தனியாகவும், கூட் டாகவும், செய்துமுடித்துவிட்டு, அடுத்த நாளும் [illegible] காவலரணில் அடுத்த இரைக்காக காத்திருக்கிறார்கள் என் றால் அது [illegible] சந்திரிகா அம்மையா ரின் துணைதான் காரணமன்றோ. சட்டத்தின் பிடிக்கு பயப்படத் தேவை யில்லை என்ற நம்பிகதை அவர்க ளுக்கு உண்டு. ஏனெனில் இதுவரை பாலியல் வல்லுறவு செய்தது நீதி மன்றில் நிரூபிக்கப்பட்ட போதும் அதி யுச்ச தண்டனையாக இடமாற்றம் மட்டுமே கிடைத்திருக்கிறது. பாலி யல் வல்லுறவின் பின் கொலை, கொலை செய்யப்பட்டவரைத் தேடி வந்த குடும்பத்தினரையும் கூண்டோடு கொலை, இதற்குக்கூட ஸ்ரீலங்காவில் தண்டனை இன்னும் வழங்கப்பட வில்லையே. இ[illegible]கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளியான இரா ணுவச் சிப்பாய் இப்போது பிணை யில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். சந் திரிகா அரசில் தனித்த பாலியல் வல்லுறவு, கூட்டு வல்லுறவு, அதன் பின் சித்திரவதை, கொலை இவை யெல்லாம் கிரிமினல் குற்றங்களல்ல ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் தமி ழர்கள்தானே.

'ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படை யினர் பாரதூரமான மனித உரிமை மீறல்களிலும் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றிலும் கடந்த 17 வருடங் களாகத் தொடர்ந்து ஈடுபட்டு வருகின் றனர். 'ஸ்ரீலங்கா காவல்துறையின ரும் தற்போது பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவது அதி கரித்துள்ளது' என்று 2000 டிசெம்பர் 20ஆம் திகதி பெண்களுக்கு எதி ரான வன்முறை தொடர்பான ஐ.நா வின் [illegible] முகவர் வெளியிட்ட அறிக்கை, ஏனைய மனித உரிமை அமைப்புக்களின் குரல்கள், அண் மையில் கொழும்பில் நடைபெற்ற கடையடைப்புடன் கூடிய கண்டனப் பேரணி, வன்னி பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் விடுத்த கண்டனம் இவை யெல்லாம் வெளிவந்தும் நடக்கப் போவது என்ன? ஜனாதிபதி சந்தி ரிகாவின் நேரடி நெறிப்படுத்தலில் சிதைக்கப்படும் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை எப்போது விடியப்போகிறது.

வன்னியில் ஒளிப்பதிவு செய்து ஆவணமாக்கப்பட்ட ஆதாரங்களை இங்கே விரிவாகப் பார்க்க வேண்டிய தேவை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. தமிழ்மக்கள் மீதான பாலி யல் வல்லுறவு இதுபற்றி ஒளிவீச்சு என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

மனித வரலாற்றின் மனிதத் தன்மை தொலைந்த பக்கங்களில் சில இவை. மனித இனங்களில் ஒன்று மற்றதை பழிவாங்க, அவமா னப்படுத்த, தன் மேலாதிக்க வெறியை வெளிப்படுத்த, இனத்தை தலைகுனிய வைக்க, ஏன் இன அடையாளத் தையே அழிக்கப் பயன்படுத்தும் கொடூர ஆயுதம் இது. ஒன்று மற்றயதன் மீது மேற்கொள்ளும் உச்சக்கட்ட சுரண் டல் வடிவம் இது. மனித இனத்தால் மனித இனத்துக்கென்று வடிவமைக் கப்பட்ட சிறப்புச் சொல்லாட்சி இது. பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடு மைகளுள் அதிகூடிய உடல், உளத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வன் முறை வடிவமும் இதுதான் (தொடரும்)

---

## 1995 இடம்பெயர்வின் பின்னர்

# வன்னியில் இயங்கும் 7 கூ.சங்கங்களை மீண்டும் குடாநாட்டுக்கு கொண்டுவர முடிவு!

அரியாலை,மே14

1995ஆம் ஆண்டில் குடாநாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக இங்கிருந்து சென்று வன்னியில் இயங்கிவந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏழு ப.நோ.கூ.சங்கங்களை யும் மீண்டும் அதேசங்கங்களுடன் இணைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம், அளவெட்டி, மல் லாகம், தெல்லிப்பழை, ஊர்காவற் றுறை, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, காரைநகர் ஆகிய ஏழு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே இடம்பெயர்ந்த நிலையில் வன்னியில் செயற்பட்டு வருகின்றன.

இந்தப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் யாழ்ப்பாணத் தில் இயங்கும் அதேசங்கங்களு டன் இணைப்பது குறித்து கடந்த 6ஆம் திகதி கிளிநொச்சியில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் ஆராயப்பட் டது.

இந்த ஏழு பல நோக்குக் கூட்டுற வுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்கள் இக்கூட் டத்தில் கலந்துகொண்டனர்.

விரைவில் இந்த ஏழு பல நோக் குக் கூட்டுறவுச் சங்கங்களையும் சொந்த இடத்தில் இணைப்பது குறித்து அங்கு முடிவெடுக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# வை.கோபாலசாமி கண்டனம்

இந்தியப் படையினரை அனுப்பி தலைவர் வே.பிரபாகரனை கைது செய்யவேண்டுமென ஜெயலலிதா தெரிவித்த கருத்தை ம.தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமி வன்மை யாகக் கண்டித்துள்ளார்.

பாண்டிச்சேரியில் இடம்பெற்ற ம.தி.மு.கவின் ஆண்டுவிழா பொதுக் கூட்டத்தின்போது வைகோ இக் கண்ட னத்தை வெளியிட்டார்.

இலங்கையில் அமைதி திரும்பும் சூழ்நிலையில் இத்தகைய ஒரு தீர் மானம் தேவையற்றது என்று அவர் தெரிவித்தார். இந்திய நாடாளுமன் றத்தை தீவிரவாதிகள் தாக்கியபோது அந்தத் தீவிரவாதிகளைப் பிடிக்க வேண்டும் என்று ஏன் ஜெயலலிதா கோரிக்கை எழுப்பவில்லை என்றும் அவர் அக்கூட்டத்தில் கேள்வி எழுப்பி யுள்ளார். (ம-9)

# மணிவிழாக்காணும் அன்புவள்ளலே வல்லவனே வாழ்க இனிது வாழ்கவே



உயர்திரு.

## பொன் [illegible]ாதேவா (தேவண்ணா)

*(பருத்திநகர் [illegible]ஞர் குழாத்தலைவர்)*

மணிவிழாக்காணும் எங்கள் அன்பு வள்ளலே வல்லவனே! எங்களுக்குத் திருமணம் நிறைவேற்றி, மங்கள ஒலி அலைகள் பரப்பி, பெரு[illegible]ழ்வு தேடித்தந்த மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ து.சண்முக[illegible]த சிவாச்சாரியப் பெருந்தகை அவர்களின் நல்லாசிகளும், மாவை மாநகரின் அதிபதியாம் எங்கள் அருள்முருகன் ஆறுமுகன் சண்முகப்பெருமானின் அருட்பார்வையும் தங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கப்பெற்று சகல சௌபாக்கியங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றேன்.

K.N.சச்சிதானந்தன்.

*சங்கை எம்பதி,*
*அம்மன் கோயிலடி,*
*மாவிட்டபுரம், தெல்லிப்பழை.*

(C/22094)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1933 | 1996 |
| 10 | 04 |
| 03 | 19 |



## Dr.ஆ.இராசநாயகம்

[இளைப்பாறிய மாவட்ட உதவி வைத்தியர்- *(D.R.M.P.)*
அனுராதபுரம் பொலநறுவ மாவட்டம்]

திதி:-14.05.2002

**ஆண்டுகள் ஆறு அலையாக மறைந்தன**
**அன்பு உள்ளங்களின் கண்ணீர்க் கடல் வற்றவில்லை**
**மண்ணுலகில் நாம் வாழும்வரை - எங்கள்**
**மன உலகில் என்றென்றும் வீற்றிருப்பீர்.**

*பானாவெட்டி,*
*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*

(3631)

உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
பாசமிகு குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சவுந்தரநாயகி சிவதாசன்

வவுணாவத்தை, தெல்லிப்பழையை வதிவிடமாகக் கொண்ட திருமதி சவுந்தரநாயகி சிவதாசன் 10.05.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுகாதாரப் பரிசோதகர் சிவதாசனின் அன்பு மனைவியும் செல்லப்பா துரைரத்தினம், காலஞ்சென்ற திருமதி இராசலட்சுமி வைரவநாதன் ஆகியோரின் சகோதரியும் அருளானந்தசிவம் (ஆசிரியர் சைவப்பிரகாச வித்தியாசாலை - தெல்லிப்பழை, ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகஸ்தர், துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக உறுப்பினர்), சச்சிதானந்தம் (நில அளவையாளர் - ஓமான்), சகுந்தலாதேவி, நித்தியானந்தம் (மாவட்ட பரிசோதகர் - ஸ்ரீலங்கா ரெலிகொம்), சிவானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, யோகேஸ்வரி, விமலராசா (பொறியியலாளர் - குவைத்), சுமதி, கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமியாரும் அஜெந்தன் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்), சுசித்திரா, நிரோஷன் (யூனியன் கல்லூரி மாணவன்), அபர்ணா, செங்கோடன், அம்புஜா, சிவசுதன் (U.K.), சுகர்ணா, அருண் பிரகாஷ், அஜித்சந்தர், திவாகரன் (கனடா), மாலினி (கனடா) ஆகியோரின் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு 8ஆம் கட்டை, மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*8ஆம் கட்டை,*
*மல்லாகம்.*

(C/22093)

தகவல்:
சி.அருளானந்தசிவம் (மகன்)

# பாலர் பாடசாலை அமைப்பு

அளவெட்டி,மே14

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய மேற்கு வதியில் ஆலய நிர்வாகத்தினரின் அனுசரணையுடனும் யாழ். சர்வவோதயத்தின் உதவியுடனும் பாலர் பாடசாலையொன்று அமைக்கப்பட்டுவருகின்றது. (ம-13-ரி)

# பதவியுயர்வு

செம்பியன்பற்று,மே 14

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய சி.சின்னததம்பி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

மேற்படி வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுந்தரம் கடந்த ஆண்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் இப்பதவி வெற்றிடமாக இருந்தது. (எ-13-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே14

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் நிதியுதவியாளராகக் கடமையாற்றிவரும் க. பத்மநாதன் பொது எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார். (எ-13)

# இருமாடிக் கட்டடம் அமைப்பு

சுழிபுரம்,மே14

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இருமாடிக் கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்படவுளளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

வகுப்பறைகளுக்கான பற்றாக்குறைகளை நீக்கும்பொருட்டு இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-28-13)

# தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்

## வருடாந்த வெளிமடைப் பொங்கல் - 2002

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த வெளிமடைப் பொங்கல் எதிர்வரும் 2002-05-17ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

கோயில் வீதியில் மேற்படி உற்சவகாலத்தில் கடை அமைக்க விரும்புவோர் தங்களுக்குரிய இடங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2002.05.16ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோவிலுக்குச் சமுகமளிக்கவும்.

**சி.தங்கவடிவேலு**
பொருளாளர்,
து.நெ.அ.கோ.த.ப.சபை

**சபா ரவீந்திரன்**
சட்ட ஆலோசகரும்,
நம்பிக்கைப் பொறுப்பாளரும்.

(C/22095)

# நீங்கா நினைவுகளின் ஓராண்டு

| உறவின் மடியில் | பிரிவின் பிடியில் |
| --- | --- |
| 1947 | 2001 |
| 09 | 05 |
| 14 | 14 |



## அமரர் சின்னன் தம்பிப்பிள்ளை

(யாழ்.செயலக அலுவலகப் பணியாளர்)

ஓராண்டு காலம் ஓடிமறைந்தாலும்
ஓராயிரம் ஆண்டு சென்றுமறைந்தாலும்
உம் நினைவை நாளும் நெஞ்சேந்தி நின்று
நினைந்து புலம்பும்...

*86/1, இராசசிங்கம் வீதி,*
*திருநகர், யாழ்ப்பாணம்.*

(3727)

*மனைவி:* த.இருதயராணி
மற்றும் குடும்பத்தினர்.


Canadian College of Business & Computers



CCBC

An Opportunity to
PROSPER
in Information Technology

*An urban location that's trendy, upscale and very cool. An opportunity to get technically in-tune with some of the hottest state-of-the-art technology in the country. At the Canadian College of Business & Computers, we're offering you the opportunity to own the future in Information Technology. Programs run all year long. Classes in English and language support included.*

Ready for the challenge? Welcome to Canada for your studies.

**Canadian College of Business & Computers**
**130 Bloor St. West, Suite 901, Toronto, Ontario, M5S 1N5**

WWW.CCBC.CA

Contact Persons: **Meena & Violeta**
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1·416·413·1234
fax: 1·416·413·0314
e-mail: admin@ccbc.ca

Call During **8:00pm - 5:00am** Sri Lanka Time

(C/21488)

### நாட்டைப் பிரிக்காமல் மேற்கொள்ளப்படும்

# பிரதமரின் சமாதான முயற்சிக்கு பூரண ஆசி உண்டு என்கிறார் தேரர்

கொழும்பு,மே14

நாட்டைப் பிரிக்காமல் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் கடினமான காரியத்தைப் பிரதமர் ஆரம்பித்திருக்கிறார். நாம் அந்தக் காரியத்துக்கு ஆசீர்வாதம் வழங்குகிறோம்.

ஆனால், நாட்டைப் பிரிப்பதாக இருந்தால் அதனை எதிர்த்து வீதியில் இறங்குவோம் என்று பிரதமரிடம் நாம் தெரிவித்திருக்கின்றோம்.

- இவ்வாறு கோட்டே ஸ்ரீ கல்யாணி சாம ஸ்ரீ தர்ம சங்க சபாவின் உபநாயக்கரான இத்தாபானே தம்மாலங்கார தேரர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் தேரர் உரையாற்றினார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

தேரர் தொடர்ந்து கூறியதாவது:-

நாட்டுப் பிரிவினைக்கு எதிராகப் போராடுவோம் என்று நாம் கூறிய போது, நாட்டைப் பிரிக்கும் திட்டத்தை யாராவது நடைமுறைப்படுத்துவார்களேயானால் தாமும் எம்மோடு சேர்ந்து வீதியில் இறங்குவதாகப் பிரதமர் கூறினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து பிரதமர் எமக்கு அறியத் தந்தார். நாம் அவரது சமாதானத் திட்டத்துக்கு ஆசீர்வாதம் வழங்கி அமைதியாக இருந்து விட்டோம். புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து பிரதமர் எம்மிடம் விளக்கியபோது நாம் ஆசீர்வதித்தோம்.

எமக்கு 10 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டது என்று மறுநாள் பிரசாரம் செய்தனர். நாங்கள் இன்னமும் மௌனமாகவே இருக்கிறோம். சமாதானத் திட்டம் குறித்து நாம் ஒன்றைக் கூறினோம்.

நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதை எதிர்க்கின்றோம் என்று கூறினோம். இன்றும் நாம் சமாதானத் திட்டம் குறித்து பிரதமருடன் பேசி வருகிறோம்.

கௌரவமான சமாதானம் குறித்து இன்று பலரும் பேசுகின்றனர். சமாதானத்தில் கௌரவம் இல்லை. சமாதானம் சமாதானமே.

- இவ்வாறு தேரர் கூறினார். (ஓ)

## இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே14

மாடு மேயக் கட்டுவதற்காக நிலத்தில் கட்டை ஒன்றை இறுக்கிய வேளை, அதன் கீழ் இருந்த மிதி வெடி வெடித்ததில் கட்டை இறுக்கியவர் இடதுகையில் படுகாயமடைந்தார்.

மீசாலை வடக்கில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் கந்தசாமி சிவதாஸ் (வயது16) என்பவரே படுகாயமடைந்தார்.

கடந்த 6 நாள்களில் மாத்திரம் இவருடன் 7பேர் வெடிப் பொருள்களினால் படுகாயமடைந்துள்ளனர் என ஆஸ்பத்திரித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, அரியாலைப் பகுதியில் இனந்தெரியாத வெடிபொருளை குத்திப் பார்த்ததில் படுகாயமடைந்த இருவரில் ஒருவரான எஸ்.செந்தூரப்பிரியன் (வயது13) தனது இடது கண் பார்வையை இழந்துள்ளார்.

கடந்த சில தினங்களில் அரியாலைப் பகுதியில் கண்ணிவெடிகளில் சிக்கி 5பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் மிதிவெடிகளில் சிக்கி தமது அங்கங்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-15-6)

## வலுவூட்டல் பயிற்சி நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மே14

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் நடத்தப்படும் வலுவூட்டல் பயிற்சி நிலையத் திறப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் இப்பயிற்சி நிலையத்தில் கலந்து கொண்டு பயிற்சி பெறுவர்.

சகல கழகங்களின் உறுப்பினர்களையும் கலந்துகொண்டு மேற்படி நிலையத்தில் பயிற்சி பெறுமாறு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கேட்டுள்ளார்.

(எ-9)

## வன்னி நோயாளர் யாழ். வருகை

யாழ்ப்பாணம்,மே14

வன்னிப் பகுதியில் இருந்து மூன்றாவது தடவையாகவும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் இருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் ஏழு நோயாளர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் கண் நோய் சம்பந்தமாகவும், இருவர் சத்திரசிகிச்சைக்காகவும், நால்வர் வைத்திய சிகிச்சைக்காகவும் யாழ். அழைத்துவரப்பட்டுள்ளனர்.

(எ-15)


**EEIC படிவம் பெறலாம்**

* மாணவ ஆண்/பெண் தாதியர் ஆள்சேர்ப்பு
* பொறியியலாளர் ஆள்சேர்ப்பு வகுப்பு II தரம்II
* புடைவைக் கைத்தொழில் பயிற்சி ஆள்சேர்ப்பு மற்றும் விவரங்கள்

மானிப்பாய் இலங்கை வங்கி முன்பாக (மோகன் வீடியோ).

(C/22123)

**கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளை (ஓவர்கேம் செற்அப்) நடத்தவுள்ளது. போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் 18.05.2002இற்கு முன் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்பங்களை செயலாளர், ஐக்கிய விளையாட்டுக் கழகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(3750) - கழகத்தினர்.

**முக்கிய அறிவிப்பு**

11/12-05-2002 இரவு எமது ஸ்தாபனமாகிய மின்சாரநிலைய வீதி, நவீன சந்தைக் கட்டட மேல்மாடியில் அமைந்துள்ள "மகாநதி" புடைவையகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ரவுசர், பஞ்சாபி வகைகள், டெனிம் ரவுசர்கள் போன்றவை பெருமளவில் களவாடப்பட்டுள்ளன. இதைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் எமது ஸ்தாபனத்தோடு தொடர்புகொள்ளவும். தகவல் தருபவரின் விவரம் இரகசியமாகப் பேணப்படுவதுடன், பெறுமதியான சன்மானம் வழங்கப்படும்.

தயவுசெய்து தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :-

ம.மதீசன்,
"மகாநதி புடைவையகம்"
No.16, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone - 2552

(C/22120)

**சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்**

**அறிவித்தல்**

எமது சங்க லொறி, லாண்ட்மாஸ்ரர் ஆகியவற்றிலிருந்து கழிக்கப்பட்ட ரயர்கள், ரியூப்கள் மற்றும் சைலன்ஸர் பைப், பிளைவில், வில்லுத்தகடு போன்ற உப உறுப்புகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களை சங்க வேலை நாள்களில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 22-05-2002

11.05.2002 (C/22121) பொதுமுகாமையாளர்.

**தொடர்புகொள்ளவும்**

C.N-9086, A-40 கார் உரிமையாளர் கார் புத்தகம் சம்பந்தமாக உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
இல.6, நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(3738)

**லஷ்சுமி** இணுவில்.

ரஜனி, நக்மா, ரகுவரன் நடித்த
**பாட்ஷா** (ரீலஸ்)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)

(3745)

**ராஜா** யாழ்ப்பாணம்

5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)

(C/21980)

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜயகாந்த் (இருவேடங்கள்)
சிம்ரன், நாசர், கபாலி
நடிப்பில்
**கண்ணுபடப்போகுதைய்யா** (ரீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (பு.நே.)
16ஆம் திகதி முதல் சமுத்திரம்

(3742)

**இதோ! இதோ!!**

**லாலா சோப், சன்சைன் சோப்பின்**

ஆரம்பகால வளர்ச்சிக்கு எமது வன்னி மண்ணில் உள்ள மக்கள் மிகவும் உறுதுணையானவர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு எமது உற்பத்தியை மிகவும் பெரும் சிரமத்தின் மத்தியில் உற்பத்திசெய்து சந்தைப்படுத்த முன்வந்திருக்கின்றோம். ஆகவே தொடர்ந்தும் எமது சிறு கைத்தொழில் உற்பத்திக்கு முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவீர்களானால் லாலா சோப், சன்சைன் சோப்பை எமது மண்ணில் முன்னிலைக்குக் கொண்டுவர முடியும். சில வறுமைக் கோட்டில் உள்ள இளைய தலைமுறைகளுக்கு எம்மால் வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.

(C/22122)

**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி.


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய மாணவி செல்வி சர[illegible] சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பராசக்தி சந்திரன்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்,
விஞ்ஞானநெறி 2ஆம் வருடம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(3743)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா வள்ளிப்பிள்ளை (சீனி அம்மா)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா வள்ளிப்பிள்ளை நேற்று (13.05.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பூரணம் தம்பதிகளின் (மல்லாகம்) அன்பு மகளும் நடராசாவின் அன்பு மனைவியும் பாலஸ்கந்தன், வரதராசன், நாகேஸ்வரி (றதி), சாந்தலிங்கம், குமரராசன், குணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரன் (லோகன்), விஜயகுமாரி, சுஜாதா ஆகியோரின் அன்பு மாமியாரும் கோடீசன், துளசியன், டிலக்சன், தரனியா, ரகுராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, கதிரமலை, கிட்டினர், விக்கினேஸ்வரன் (பிள்ளையார்) மற்றும் நல்லம்மா (நைஜீரியா), நடராசா (ஆசிரியர் - அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.நடராசா (கணவர்)

*வட்டுதெற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(3744)

### திருமதி பார்வதி வல்லிபுரம்

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி பார்வதி வல்லிபுரம் 11.05.2002 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும் நடராசா, நவரத்தினம், சபாரத்தினம் (டென்மார்க்), சுப்பிரமணியம் (டென்மார்க்), பாலசிங்கம் (யா/மருத்துவபீடம்), தவமலர் (சுவீடன்), இராசேஸ்வரி (ஜேர்மனி), சரோஜா, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசலிங்கம் (சுவீடன்), சிவராசா (ஜேர்மனி), செல்வராசா (சுவிஸ்), ஸ்ரீசாந்தன் (ரெலிகொம்), சரஸ்வதி, செல்வராணி, செல்லக்கிளி (டென்மார்க்), யோகராணி (டென்மார்க்), ஜெனதா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.பாலசிங்கம் (மகன்)

*உரும்பிராய் மேற்கு.*

(3739)

### தம்பிமுத்து பாக்கியம்

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது மானிப்பாயில் வசித்தவருமான தம்பிமுத்து பாக்கியம் நேற்று (13.05.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் மனைவியும் தங்கம்மா, வேலுப்பிள்ளை இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவமணி, குணமணி, யோகநாதன், பரமநாதன், பேரின்பநாதன், காலஞ்சென்ற செல்லமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன், இந்திராணி, சாந்தினி, கலாறஞ்சினி, காலஞ்சென்ற குணதாசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவகுமார், பிறேம்ஜெயா, றதிபவானி, செல்வராஜா, றஞ்சித்குமார், வினோ, தாட்சாயினி, தாரணி, காண்டீபன், சிறியோகா, தமிழினி, தர்சிகன், சுதர்யா, சுதாசினி, பிரவினா, ரகுணன், ரஜிந்தன், யதுர்சினி ஆகியோரின் பேர்த்தியும் இலக்கியா, அபினன், ஆதித்யன், ஹர்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2002) புதன்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணிக்கு பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சோதிவேம்படி லேன்,*
*மானிப்பாய்.*

(3748)

வன்னிப் பிரதேசத்துக்கான

# அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கு நிதி தரப்படுவதில் இழுபறிநிலை

## கிளிநொச்சி அரச அதிபர் கவலை

கிளிநொச்சி,மே14

போரால் இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியமர்விற்காகத் தம்மால் வழங்கப்பட்ட திட்டமொன்றை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு அங்கீகரித்துள்ளபோதிலும், அதற்கான நிதி இதுவரை வழங்கப்படவில்லை என கிளிநொச்சி அரச அதிபர் வே.ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பொருளாதாரத்தடை நீக்கம், பாதைத் திறப்பு ஆகியவற்றின் பின்னர் கிளிநொச்சியில் போரால் இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள் குடியமர்வுத் திட்டம் ஒன்றை புனர்வாழ்வு அமைச்சு ஏற்றுக்கொண்டது. 1000 குடும்பங்களின் மீள்குடியமர்விற்காக முன்வைக்கப்பட்டு ஏற்கப்பட்ட இத்திட்டத்தில் தொண்டமான் நகர், பாரதிபுரம் ஆகியன உள்ளடக்கப்பட்டன. இத்திட்டம் அரசால் ஏற்கப்பட்டு 2 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இதற்கான நிதி இதுவரை வழங்கப்படவில்லை.

வன்னிப்பகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்கு அரசு தடை விதித்திருந்த கடந்த ஆண்டில் புனர்வாழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட தடை நீக்கப்பட்ட இந்த ஆண்டில் குறைவான நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதால் உடனடியாக நிதியை வழங்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கண்டி ஏ-9 வீதியின் மறுசீரமைப்புக்கு நிதி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது. ஏனைய தர வீதிகளைப் புனரமைக்க அண்மையில் கிளிநொச்சிக்கு வந்த சீனக் குழு ஒன்று இணங்கியுள்ளது. வடககு - கிழக்கு சமூக மேம்பாட்டு அபிவிருத்தித் திட்ட அமைச்சு 50 மில்லியன் ரூபா திட்டமொன்றை நடைமுறைப்படுத்த இணங்கியுள்ளது. ஆனால், இதுவரை இவற்றுக்கான நிதி கிடைக்கவில்லை என்று கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# அடுத்த மாதம் 1முதல் 5வரை கலாசார சீரழிவு தடுப்பு தினம்

## மாநகராட்சி பிரகடனம்

"யாழ். மாநகர சபையின் சுகாதாரக் குழு அடுத்த மாதம் 1ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை உள்ள நாள்களை சமூகக் கலாசாரச் சீரழிவு தடுப்புத் தினங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் கலாசார சீரழிவுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்பொருட்டே இத்தினங்கள் அனுஷ்டிக்கப்படவிருப்பதாக சுகாதாரக் குழு தலைவர் மனுவல் மங்களநேசன் தெரிவித்துள்ளார்.

இத்தினங்களில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தலங்களில் கலாசார சீரழிவைத் தடுப்பது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-8-ரி)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது சேறு பூசி ஒப்பந்த மீறல்கள் என்று முறைப்பாடு செய்வதில் சில சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. இதில் நாம் விழிப்பாக இருக்கின்றோம். மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும். படைத் தரப்பினரின் நடவடிக்கைகளை நாம் சுட்டிக்காட்ட விரும்பினால் அவை ஒரு பட்டியலாக அமையும்.

ஆனால், எமது தலைவரின் விருப்பம், பேச்சுக்கள் முறிவடைய புலிகள் காரணமாக இருக்கக்கூடாது என்பதேயாகும். எனவே நாம் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்கின்றோம்" என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் கௌசல்யனும் உரையாற்றினார். (ஒ)

### பாடசாலைகளிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராசா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராசையா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா, தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் பா.விக்கினேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வரத்தினம் ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பங்குபற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தத்தமது பிரதேசத்தில் படையினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகளின் விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

பல பாடசாலைகள் சொந்த இடங்களில் செயற்படமுடியாத நிலை நீண்டகாலம் நீடிப்பதால் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். எனவே பாடசாலைகளை மீண்டும் பழைய இடங்களில் இயங்க அனுமதிக்கவேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வலி.வடக்கில் மட்டும் 23 பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளன என்றும் -

சுமார் 12 வருடங்களாக அவை செயலிழந்துபோயுள்ளதாகவும் -

அவர்கள் தெரிவித்தனர்.

குடாநாட்டில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் செயற்படும் பாடசாலைகளை இயங்கச் செய்வதில் சிக்கல்கள் உள்ளன. அது பாதுகாப்பு அச்சுறுத்தல் மிகுந்த விடயம். இதன் காரணமாக அந்தப் பாடசாலைகளை உடனடியாகக் கையளிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது - என்று படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதி உச்ச பாதுகாப்பு வலயத்தின் எல்லைகளில் உள்ள வசாவிளான் ம.வி., தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தந்தை செல்வா ஆரம்பப் பாடசாலை, குரும்பசிட்டி பொன்.பரமானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை இயங்கவைக்க படையினர் இணக்கம் தெரிவித்தனர். ஆயினும் அதிலும் சில சிக்கல்கள் உள்ளன என்று படைத்தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

படையினர் பயிற்சியில் ஈடுபடும்போது துப்பாக்கிச் சன்னங்கள் பாடசாலைகளில் வீழ்ந்தால் அதனால் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடும் என்பன போன்ற நிலைமைகளைப் படையினர் சுட்டிக்காட்டினர்.

அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே உள்ள பாடசாலைகளில் இருந்து படையிலர் வெளியேறுவதற்கு முன்பாக அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றவேண்டியுள்ளது. கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பின்னர் அவை கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர். (ஐ-3-10)

## கடையில் திருடிய நபர் கைது!

யாழ்ப்பாணம்,மே14

யாழ்நகரில் உள்ள குளிர்பானக் கடையில் நேற்றுமுன்தினம் இரவு திருடியதாகக் கூறப்படும் நபரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

குறிப்பிட்ட கடையில் பணம் மற்றும் சிகரெட் என்பவற்றைத் திருடிக்கொண்டு வெளியேறியசமயம் அந்த நபர் அப்பகுதியில் நின்ற பொலீஸாரிடம் பிடிபட்டதாகக் கூறி நேற்று யாழ். நீதிமன்றில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

கைதானவர் குறிப்பிட்ட கடையில் பணியாற்றுபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 30 ஆயிரம் ரூபா (இருவர்) ஆள்பிணையில் செல்ல யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் உத்தரவிட்டார்.

(ஒ-10)

# வீதியோரத்தில் உறங்கியவர் வானில் நசியுண்டு மரணம்!

## தாண்டிக்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா,மே14

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் அன்னாசி வியாபாரி ஒருவர் மினி வானினால் நசியுண்டு உயிரிழந்தார்.

வியாபாரத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் அதிகாலை கண்டி வீதி ஓரமாகப் படுத்துறங்கிய பிரஸ்தாப வியாபாரிமீது அங்கு தரிக்கவந்த வான் ஒன்று ஏறியதில் அவர் சக்கரங்களில் சிக்கி நசியுண்டு மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்த முத்துச்சாமி கமலேஸ்வரன் (வயது 37) என்பவரே இவ்வாறு அதில் மரணத்தைச் சந்தித்துள்ளார்.

ஏ-9 கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணம் செல்வதற்காக வவுனியாவுக்கு வரும் வாகனங்கள் இரவு வேளையில் தாண்டிக்குளம் பகுதியில் தரித்து விடப்படுகின்றன.

அந்தப் பகுதியில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் இரவுநேரத்தில் வீதியோரங்களில் படுத்துறங்குவது உயிருக்கு ஆபத்தாகலாம் என்று பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

(ஐ)

பாடசாலைகளில் தங்கியுள்ள

# படையினரை அகற்றுவது குறித்து வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா,மே14

வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் உள்ள இராணுவத்தினரை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை வவுனியா அரச அதிபரின் தலைமையில் செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்விசார் உயர் அதிகாரிகள், இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் உள்ள 13பாடசாலைகளில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் அப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதெனவும் -

ஆகவே இராணுவத்தினர் அந்த பாடசாலைகளை விட்டு வெளியேற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் - கலந்துரையாலில் கோரப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இராணுவத் தலைமையக அதிகாரி, மக்கள் இப்பகுதிகளில் மீளக்குடியேறி இயல்பான செயற்பாடுகள் ஏற்படும்போது அப்பாடசாலைகளில் இருந்து இராணுவத்தினர் விலக்கிக்கொள்ளப்படுவர் என்று தெரிவித்துள்ளார்.

(ஒ-12-4)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' இன்று புறப்படாது

யாழ்ப்பாணம்,மே14

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் சேவை காலநிலை சீரில்லாத காரணத்தால் இன்று இடம பெறமாட்டாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஒ-3-13)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புருகோவிட்டுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இது தொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில் இந்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

'முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பொது மக்கள் வாழும் பகுதிகளின் மேலாக ஆளில்லாத உளவு விமானங்கள் பறப்பது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே கொண்டு வந்துள்ளனர். மேற்படி மாவட்டங்களில் நகரங்கள் மற்றும் கிராமங்களின் மீது படையினரின் விமானங்கள் மிகவும் தாழப் பறந்து செல்வதால் பொதுமக்கள் - குறிப்பாகப் பாடசாலைச் சிறுவர்கள் - பெரும் அச்சமடைகின்றனர்.

யுத்த காலத்தில் இத்தகைய உளவு விமானங்களின் பறப்பு நிலப் பரப்பைக் கண்காணிப்பதாக மட்டும் இல்லாது வான் தாக்குதல்களின் முன்னோடி நடவடிக்கையாகவும் இருந்தது. தற்போது உளவு விமானங்கள் பறப்பது அத்தகைய நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டதாக இருக்குமோ எனத் தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலையடைகின்றனர்.

இந்த வான் கண்காணிப்பு, யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும். இனிமேலும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்வது நம்பிக்கையை வளர்க்க இலங்கை அரசு மேற்கொண்டுள்ள முயற்சியைச் சீர்குலைக்கும்.

ஆகவே ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தவிர்த்து தமிழ்ப் பிரதேசங்களில் அமைதியும் இயல்பு நிலையும் பேணப்பட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அரசுத் தரப்பிடம் வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-ஒ)

### மகியங்கனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது.

நேற்று மாலை வரை ஆற்றில் இழுத்துச் செல்லப்பட்ட இருவரும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என்றே கூறப்படுகிறது. (ஒ-4-6-ரி)

### விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாலயத்திலும், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் இன்று மாலை 6மணிக்குப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

சமகால அரசியல் சூழ்நிலை பற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விளக்கமளிக்கவுள்ளனர். (ஐ)


## சூரிய மின்சக்தி உபகரண விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையின் பிரபல சூரிய மின்கல உற்பத்தி நிறுவனங்களான 'அசெஸ் சோலர் பிறைவேட்', 'ஷெல் சோலர் லங்கா', 'செல்கோ சோலர் லங்கா', 'அல்பா தேமல் சிஸ்டம்ஸ்' ஆகியன யாழ். குடாநாட்டில் சூரிய மின்சக்திப் பாவனையை விருத்தி செய்ய ஆவலாய் உள்ளன.

இதன் பொருட்டு யாழ். குடாநாட்டில் சூரிய மின்கல உபகரண விநியோகஸ்தர்களை நியமிக்க இவை முயற்சி எடுத்துள்ளன. செயல்திறனும், உறுதிப்பாடும், பொறுப்புணர்வும், போதிய நிதிவளமும் உள்ளவர்கள் இதற்கான விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பான அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும். சவால் மிக்கதும், மிகுந்த லாபம் ஈட்டும் வாய்ப்பைக் கொண்டதுமான இந்த மின்சக்தி வர்த்தகத்தில் விநியோகஸ்தர்களாக ஆர்வமுடையோர் எதிர்வரும் பத்துத் தினங்களுக்குள் தமது விவரங்களை (C/22096)

தலைவர். வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம்.
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

அல்லது

முகாமைத்துவ முகவர். சூரிய மின்கல உற்பத்தியாளர் சங்கம்.
120 B, ஹவலக் வீதி, கொழும்பு - 05
தொலைபேசி:- 01-504536

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தெரிவு செய்யப்படும் விநியோகஸ்தர்களின் தொழில்நுட்பவியலாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப்பயிற்சி வழங்கப்படும்.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS பிரிவு - 2
ஆரம்பம்:15.05.2002 புதன் காலை 8 மணி
- ஒவ்வொரு பிரிவிலும் 30 மாணவர்கள் மட்டும்
- அலகு ரீதியான பயிற்சிப் பரீட்சை
- முன்னணி ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டல். (3749)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
By. Mr.B.SASI
பிரிவு II ஆரம்பம்: 15.05.2002 3 p.m.
NEW HARY'S INSTITUTE
Vaddukoddai East, Sithankerny. (3729)

G.C.E. (A/L) PHYSICS
By: T.SHAN (B.Sc. Dip. in Ed.)
2003 - ஆரம்பம் (15-05-2002) வெப்பவியல் [HEAT] Wed Mon } 3 p.m.
2004 - பொறியியல் [MECHANICS] Wed Mon } 4 p.m.
இடம்: 410, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (3740)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.